இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி a monthly information digest

மே 2022 May | இதழ் 375 ISSUE

# தமிழர் தகவல்
## TAMILS' INFORMATION

ESTD From The Community To The Community 1991




Premier Canadian Tamil Journal




மாதரே சிறகை விரி !



உலகளாவிய குரலில்
கனடா சுபீகா



ஹாவர்ட் தமிழ் இருக்கையின்
தலைமைப் பேராசிரியர்




வரலாற்று ஆவணம்

சமூகத்துடன்
இணைந்த
வளர்ச்சி
ஸ்தாபிதம் -1991

32 வது ஆண்டில்
32nd Year

Growing
with the
Community
ESTD-1991

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

**ஆரம்பம்**
பெப்ரவரி 1991

P.O. Box-3, Station F
Toronto, ON M4Y-2L4,
Canada

**தொலைபேசி:**
416 920 9250

**மின்னஞ்சல்**
**tamilsinfo@sympatico.ca**

**தயாரிப்பு**
ஈழத்தமிழர் தகவல் நிலையம்
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

**வெளியீடு**
அகிலன் அசோஷியேற்ஸ்

**முதன்மை ஆசிரியர்**
திரு எஸ். திருச்செல்வம்

**இணை ஆசிரியர்**
றஞ்சி திரு

**உதவி ஆசிரியர் &**
**தயாரிப்பு முகாமையாளர்**
சசி பத்மநாதன்

**உதவி ஆசிரியர்கள்**
குயின்ரஸ் துரைசிங்கம்
அனோஜினி குமாரதாசன்

**பொது முகாமையாளர்**
ஆர். ஆர். ராஜ்குமார்

**பொதுமக்கள் தொடர்பு**
என். விமலநாதன்
என். குமரதாசன்
இ. சிவலிங்கம்
வே. விவேகானந்தன்
ப. சிவசுப்பிரமணியம்

**தொழில்நுட்ப உதவி**
ஹரன்கிறாஃப்

**மாதாந்தம்**
5000 பிரதிகள்

**ஆண்டு மலர்**
6000 பிரதிகள்

**இணையம்**
**www.tamilsinformation.info**

*ஆசிரியரிடமிருந்து...* ***From the Editor***

# காலிமுகத்திடலில் முள்ளிவாய்க்கால்!

மக்கள் தன்னெழுச்சி என்ற அரசுக்கு எதிரான மாபெரும் போராட்டம் இலங்கையில் ஆரம்பமாகி ஒரு மாதமாகிவிட்டது.

ஒரு குடும்பம் முழுமையாக ஆட்சிக் கட்டிலில் ஏறி ஜனநாயகம் என்ற பெயரில் சர்வாதிகாரப் போக்கை மேற்கொள்வதன் பிரதிபலிப்பை மக்கள் நேரில் தரிசிக்கின்றனர்.

இராணுவச் சிந்தனை வயப்பட்ட கோதபாய கோட்பாடு, நாட்டை அதல - பாதளத்துக்கு கொண்டு சென்றதன் அறுவடையே மக்கள் தன்னெழுச்சி.

கோதபாயவை, மகிந்தவை, ஆட்சியினரை வீட்டுக்கு அனுப்புவோம் என்ற கோசத்துடன் தலைநகர் கொழும்பின் காலிமுகத்திடல் அதிர்கிறது. நாடு தழுவிய ரீதியில் இடம்பெறும் ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், வீதி மறிப்புகள், கொடும்பாவிகளால் நாடு அடிக்கடி முடக்கப்படுகிறது.

கிடைத்த சந்தர்ப்பத்தை முறையாகப் பயன்படுத்தத் தெரியாத எதிர்க்கட்சிகள் தங்களுக்குள் பிளவுண்டு செயற்படும் பலவீனத்தை, ராஜபக்ச குடும்பம் தங்களுக்கான பலமாக்கிப் பயணிக்கிறது.

ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பது, அதற்கேற்றவாறு 21வது அரசியலமைப்பைக் கொண்டு வருவது, இடைக்கால சர்வகட்சி அரசொன்றை புதிய பிரதமர் தலைமையில் நிறுவுவது என்று சொல்லப் - பட்ட எதுவுமே ஏப்ரல் இறுதிவரை நடைபெறவில்லை.

ராஜபக்ச குடும்பத்தினரில் நால்வரை அமைச்சர் பதவியிலிருந்து நீக்கிய போதிலும், ஜனாதிபதி மற்றும் பிரதமர் பதவிகளில் ராஜபக்சக்களே இருக்கின்றனர். புதிய அமைச்சரவையில் இளையோர் கூடுதலாக உள்வாங்கப்பட்ட போதிலும், இவர்களுள் அநேகர் முன்னைய அமைச்சர்களின் குடும்ப உறவுகளே.

கோதபாய கிராமம், மைனா கிராமம் என்பவை உருவாக்கப்பட்டு கோதாவையும் மகிந்தவையும் வீட்டுக்கு அனுப்ப எடுத்த முயற்சிகள் பிசுபிசுத்துப்போய், அமைச்சரவை மாற்றமே மக்கள் கேட்பதுபோல தோற்றம் காட்டப்படுகிறது. நீதி, சட்டம், ஒழுங்கு என்பவைகள் இன்னமும் இன அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படுகின்றன.

காலிமுகத்திடலில் பல்லாயிரம் மக்கள் கூடியிருப்பதால் கொரோனா தொற்றுப் பரவாது. ஆனால், அன்னை பூபதியின் நினைவஞ்சலிக்கு அவரது குடும்பத்தினர் பங்கேற்பதற்கு கொரோனாவைக் காரணம் காட்டி நீதிமன்றம் தடை விதிக்கிறது.

இந்த மாதம் 18ம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாள். இதற்கும் வழமைபோல தடை விதிக்க ஆட்சித் தரப்பு முயலக்கூடும். அப்படி நடக்குமானால் காலிமுகத்திடல் என்ன செய்யும்?

குடும்ப ஆட்சியின் இனவாதத்தை பகிரங்கமாகக் கண்டிப்பார்களா? முள்ளிவாய்க்கால் சென்று நினைவேந்தலில் இணைவார்களா? ஆகக்குறைந்தது காலிமுகத்திடலிலாவது முள்ளிவாய்க்காலை உருவாக்கி நினைவேந்துவார்களா?

**திரு எஸ். திருச்செல்வம்**

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

**Established**
February 1991

P.O. Box-3, Station F
Toronto, ON M4Y-2L4,
Canada

Tel: 416 920 9250

**E-mail**
tamilsinfo@sympatico.ca

**Produced by**
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

**Published by**
Ahilan Associates

**Editor in chief**
Thiru S. Thiruchelvam

**Associate Editor**
Ranji Thiru

**Assistant Editor and Production Manager**
Sasi Pathmanathan

**Assistant Editors**
Quintus Thuraisingam
Anojini Kumaradasan

**General Manager**
R. R. Rajkumar

**Public Relation**
N. Vimalanathan
N. Kumaradasan
R. Sivalingam
V. Vivekananthan
P. Sivasubramaniam

**Technical Support**
Haran Graph

**Monthly**
5000 Copies

**Annual**
6000 Copies

**Website**
www.tamilsinformation.info

## ஒன்ராறியோ வாகனங்கள் ஸ்டிக்கர் ரத்தானாலும் உரிமைத் தகடு (License Plate) புதுப்பிக்கப்பட வேண்டும்!




ஒன்ராறியோ மாகாணத்திலுள்ள வாகனங்களின் ஸ்டிக்கர் கட்டணத்தை கடந்த மார்ச் மாதம் 13ம் திகதியிலிருந்து மாகாண அரசு ரத்துச் செய்தது. அத்துடன், ஸ்டிக்கரை வாகன இலக்கத் தகட்டில் ஒட்டும் முறையும் ரத்தானது.

ஆனால், வாகனத்துக்கான உரிமைத் தகடு (License Plate) புதுப்பிக்கப்பட வேண்டியது கட்டாயம் என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இலக்கத்தகடு புதுப்பித்தலை ஒன்லைன் அல்லது தபால் மூலம் அல்லது சேர்விஸ் ஒன்ராறியோ அலுவலகத்துக்கு நேரடியாகச் சென்று செய்லாம்.

இவ்வாறு இலக்கத் தகடு புதுப்பிக்கும் போது வழங்கப்படும் ஆவணத்தை, வாகன உரிமம் - வாகன காப்புறுதி - சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவைகளோடு வாகனத்தில் வைத்திருக்க வேண்டும். உரிமைத் தகடினை முன்னைய ஸ்டிக்கர் போன்று வருடாந்தம் அல்லது இரண்டு வருடத்துக்குரியதாகப் பெற முடியும். இதற்கு கட்டணம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை. பொலிசார் வாகனத்தை சோதனையிடும்போது இதனைக் காட்ட வேண்டும்.

ஒன்ராறியோவில் பதிவு செய்யப்பட்ட பயணிகள் வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள், மொபட்டுகள், இலகுரக வண்டிகள் மட்டுமே இந்தத் திட்டத்துள் அடங்கும். கனரக வணிக வாகனங்கள், பனி அகற்றும் ஸ்னோமொபைல் வாகனங்கள் வழமை போன்று ஸ்டிக்கர் பெற வேண்டியது கட்டாயம். மேலதிக விபரங்களை 1 888 333 0049 என்ற இலக்கத்தில் பெறலாம். இது தொடர்பாக மாகாண அரசு விடுத்துள்ள அறிக்கை ஆங்கில வடிவில் இந்த இதழின் நான்காம் பக்கத்தில் இடம்பெற்றுள்ளது.

# ஜூன் 2: ஒன்ராறியோ மாகாண தேர்தல் ரூடோ - ஜக்மித்சிங் 'சம்பந்தம்' போன்று இங்கும் ஏற்பட வாய்ப்புண்டா?

## பத்து நாட்களுக்கு முற்கூட்டிய வாக்களிப்பு

ஒன்ராறியோ மாகாண அரசுக்கான தேர்தல் அடுத்த மாதம் (ஜூன்) 2ம் திகதி இடம்பெறவுள்ளது. அதிகாரபூர்வ தேர்தல் பரப்புரைகள் இந்த மாதம் 4ம் திகதி ஆரம்பித்தன.

கொரோனா கால பேரிடரை முன்னிட்டு, தேர்தல் நாளன்று பெரும்பாலானவர்கள் வாக்களிக்கச் செல்வதை தவிர்க்கலாம் என்ற எதிர்பார்ப்பில் முற்கூட்டிய வாக்களிப்பு பத்து நாட்களுக்கு இடம்பெறவுள்ளது. இந்த மாதம் 19ம் திகதி முதல் முற்கூட்டிய வாக்களிப்பு இடம்பெறும் திகதிகள் இம்மாத முற்பகுதியில் தேர்தல் இலாகாவினால் அறிவிக்கப்படும்.

124 தொகுதிகளைக் கொண்ட ஒன்ராறியோ மாகாணத்தில், ஏதாவதொரு கட்சி அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சியமைப்பதானால் ஆகக்குறைந்தது 63 ஆசனங்களில் வெற்றிபெற வேண்டும். கடைசியாக இடம்பெற்ற 2018ம் ஆண்டுத் தேர்தலில் டக் ஃபோர்டின் கன்சர்வேடிவ் கட்சி 76 தொகுதிகளில் வெற்றிபெற்று தனியாக ஆட்சியமைத்தது. அது போன்ற சாதக நிலை இப்போது இல்லையென்று ஆரம்ப கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன. எனினும், கன்சர்வேடிவ் கட்சியே முன்னணியில் நிற்கிறது. தேர்தலுக்கு இன்னமும் மூன்று வாரங்களுக்கு மேல் இருப்பதால் கருத்துக் கணிப்புகள் ஏறி இறங்குமென அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

லிபரல், என்.டி.பி. ஆகிய இரண்டும் கடந்த மாத இறுதிவரை பல தொகுதிகளில் அபேட்சகர்களை நியமிக்க முடியாதிருந்த நிலை காணப்பட்டது. ஏப்ரல் மூன்றாம் வார நிலைவரப்படி என்.டி.பி. முப்பது தொகுதிகளிலும், லிபரல் இருபது வரையான தொகுதிகளிலும் வேட்பாளர்களை அதிகாரபூர்வமாக அறிவிக்கவில்லை.

கடந்த மாத இறுதிக் கருத்துக்கணிப்புகளின்படி கன்சர்வேடிவ் கட்சிக்கும் - லிபரல் கட்சிக்குமிடையிலான வித்தியாசம் நான்கு வீதமாகக் காணப்பட்டது. இந்தத் தேர்தலில் மாகாணத்திலுள்ள பல உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் வேட்பாளர்களாக களம் இறக்கப்பட்டுள்ளனர். ரொறன்ரோ நகரசபையின் இரண்டாம் வட்டாரமான எற்றோபிக்கோ வடக்கு உறுப்பினர் மைக்கல் ஃபோர்ட், யோர்க் தெற்கு - வெஸ்ரேண் வட்டாரத்தில் கன்சர்வேடிவ் வேட்பாளராக போட்டியிடுகிறார். இவர் முதலமைச்சர் டக் ஃபோர்டின் சகோதரியின் புதல்வர்.

ரொறன்ரோ நகரசபையின் பதின்மூன்றாம் வட்டார உறுப்பினரான கிறிஸ்டின் வொங் - ராம், என்.டி.பி. வேட்பாளராக ரொறன்ரோ மத்திய தொகுதியில் போட்டியிடுகிறார். தற்போது மாகாண சபை உறுப்பினர்களாக இருக்கும் முக்கியமான மூன்று பெண்களான தற்போதைய சுகாதார அமைச்சர் கிறிஸ்டின் எலியட், முன்னாள் முதலமைச்சர் கத்லின் வின், ரொறன்ரோ மத்திய தொகுதி உறுப்பினர் சூசன் மொறிசன் ஆகியோர் அடுத்த மாத தேர்தலில் போட்டியிடாது அரசியலிலிருந்து ஓய்வு பெறுகின்றனர்.

இத்தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சி அறுதிப் பெரும்பான்மை பெறாது சிறுபான்மை அரசை உருவாக்குமானால் அதைத் தோற்கடிப்பதற்கான வியூகம் திரைமறைவில் வகுக்கப்படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கனடிய மத்திய அரசில் சிறுபான்மை அரசாகவிருக்கும் லிபரலுக்கு, என்.டி.பி. ஐந்தாண்டுகளுக்கான ஆட்சியை தக்க வைக்க ஆதரவு வழங்கும் 'சம்பந்தம்' நடைபெற்று அதனடிப்படையில் என்.டி.பி.யின் வேலைத்திட்டங்களை லிபரல் அரசு செயற்படுத்தி வருவது போன்ற நிலைமை ஒன்ராறியோவிலும் ஏற்படலாமென ஆங்கில ஊடகமொன்று தனது கட்டுரையில் சுட்டியுள்ளது.

அதாவது, டக் ஃபோர்டின் கன்சர்வேடிவ் ஆட்சியை இரண்டாம் தடவையும் உருவாக்கவிடாது தடுக்கும் நோக்கில், மாகாண லிபரல் - மாகாண என்.டி.பி. ஆகிய இரண்டும் மத்திய அரசில் இடம்பெற்ற 'சம்பந்தம்' போன்று இங்கும் இணைக்கமொன்றுக்கு வரக்கூடுமென எதிர்வு கூறப்படுகிறது. தொடர்ந்து மேற்கொள்ளப்படும் கருத்துக் கணிப்புகள் லிபரலும் கன்சர்வேடிவும் இணைந்து அறுபத்திமூன்றுக்கும் அதிகமான ஆசனங்களைப் பெறும் பட்சத்தில், எதிர்பார்க்கப்படும் இக்கட்சிகளின் 'சம்பந்தம்' அவசியமாகுமென அரசியல் வல்லுனர்கள் கருதுகின்றனர்.



எஸ்தி



றஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

உலகில் மனிதர் வாழ்வதற்குச் சிறந்த நகரில் ஒன்றென அறிவிக்கப்பட்டுள்ள கனடாவின் ரொறன்ரோவில் 2021ம் ஆண்டில் மட்டும் வீடற்றவர்கள் என அடையாளம் காணப்பட்ட 216 பேர் மரணித்துள்ளனர். இது 2020ல் இறந்த 144 வீடற்றவர்களைவிட 72 அதிகமாகும். இவ்வாறான மரணங்களுக்கு அதீத போதைவஸ்துப் பாவனையே காரணமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

போயிங் நிறுவனத்துக்குச் சொந்தமான 320 விமானங்கள் 2011-2020 ஆண்டுக்கால பகுதியில் விபத்துகளை சந்தித்துள்ளன. இதனால் 1752 பேர் மரணித்துள்ளனர். 1959 முதல் 2020 வரையான 61 ஆண்டுக்காலத்தில் 2082 வணிக விமானங்களின் விபத்துகளில் 30,132 பேர் உயிரிழந்துள்ளனர். இவர்களுள் 6,206 பேர் அமெரிக்காவிலும் கனடாவிலும் இடம்பெற்ற விபத்துகளில் இறந்துள்ளனர்.

திரைப்படம் பார்ப்பதில் கின்னஸ் சாதனை படைத்துள்ளார் அமெரிக்காவின் புளோரிடாவைச் சேர்ந்த ரமிரோ அலனிஸ் என்ற இளைஞர். இவர் Spider Man - No Way Home என்ற திரைப்படத்தை 25 நாட்களுக்கிடையில் தொடர்ந்து 292 தடவைகள பார்த்துள்ளார். சுமார் 720 மணித்தியாலங்களை இதற்காக அவர் செலவிட்டுள்ளாரென கின்னஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

கனடிய மக்கள் தொகையில் 1.3 மில்லியன் ஆட்களுக்கு குடும்ப மருத்துவர் இல்லையென்று சுகாதார திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது. இவர்கள் Walk in clinic மற்றும் மருத்துவமனைகளின் அவசர சிகிச்சைப் பிரிவுகளிலேயே சிகிச்சை பெற்று வருகின்றனர். கனடிய அரசு கொரோனா வழங்கிய தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ளாதவர்களில் பெரும்பான்மையினர் குடும்ப மருத்துவர்கள் இல்லாதவர்கள் என்று கனடிய சுகாதார மருத்துவத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தியாவின் நான்கு பிரதான பகுதிகளில் அதி உயரமான அநுமார் சிலைகளை நிறுவும் மோடி அரசின் திட்டத்துக்கமைய 101 அடி உயரமான சிலை கடந்த மாதம் குஜராத்தில் நிறுவப்பட்டது. ஏற்கனவே இமாச்சலத்தின் சிம்லா நகரில் ஒன்று திறந்து வைக்கப்பட்டது. அடுத்த இரண்டு சிலைகளும் ராமேஸ்வரத்திலும், மேற்கு வங்கத்திலும் அமைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாயிரத்து எழுபத்திமூன்றடி நீளமான உலகின் அதிநீண்ட கண்ணாடிப் பாலம் வியட்நாமில் அமைக்கப்பட்டுள்ளது. பாய்லான் என பெயரிடப்பட்டுள்ள இந்தப் பாலம் முழுமையாக உருக்குக் கண்ணாடியிலானது. ஒரே நேரத்தில் 800க்கும் அதிகமான வாகனங்கள் இந்தப் பாலத்தில் செல்ல முடியும். ஏற்கனவே சீனாவிலுள்ள 1,410 அடி நீளமான கண்ணாடிப் பால சாதனையை இது முறியடித்துள்ளது.

கனடாவின் ரொறன்ரோ மத்தியில் றிச்மன்ட் வீதி - ஜார்விஸ் வீதி சந்திக்கருகிலுள்ள உணவகம் ஒன்றின் முகப்பில் பின்வரும் வாசகம் மின்னொளியில் காணப்படுகிறது: “கடந்த 28 ஆண்டுகளில் இந்த உணவகம் ஒரு நாள் கூட மூடப்படவில்லை. இந்த 29 ஆண்டுக் காலத்தில் 38 மில்லியன் உணவுப் பிரியர்களுக்கு நாம் சேவையாற்றியுள்ளோம்”. நம்ப முடியாத இந்த வாசகம் பலரையும் கவர்ந்து வருகிறது.

# How To Renew Your Ontario Licence Plate

If you're wondering if you still need to renew your Ontario licence plate now that the stickers and renewal fees are a thing of the past, the answer is yes — and drivers might want to make sure everything is up to date before hitting the road.

As of March 13, licence plate stickers were officially removed for most vehicles, like motorcycles, mopeds, light-duty trucks and passenger vehicles. Heavy commercial vehicles and snowmobiles didn't see any changes.

Before this change, drivers in southern Ontario had to shell out $120 each year while those in northern Ontario paid $60 a year for their stickers.

Even though these fees are gone, Ontarians still have to renew their licence plates in order to legally drive.

According to the Ontario government, vehicles must be insured and have a valid licence plate before they can be used in the province.

The renewal period also varies depending on the kind of vehicle you have and whether or not you choose to renew each year or every two years.

There are three ways drivers can go about it: submit their application online, send it through the mail, or visit a ServiceOntario location. The Ontario website points out that there are a few things motorists need in order to renew their licence plates, like their licence plate number, their vehicle permit number, the name of their insurance provider and policy number, and to pay off any outstanding fines or toll fees.

Drivers will also need to take note of how many kilometres have been clocked on their odometer, and might even have to provide an emissions test if they're renewing for a heavy-duty diesel vehicle.

If you're the forgetful type, you can sign up for a reminder for when it's time to get your plates renewed. ServiceOntario will either send you an email, a text or call you up on the phone 60 and 30 days beforehand.

They can also send reminders for when it's time to get a new licence or health card.



Professor A. Joseph Chandrakanthan

# Dr. G.U. Pope and His Perspectives on Tamilology

The term Tamilology signifies today the whole trajectory of Tamil Studies and research including translation and commentaries of ancient Tamil literary texts dating back to the pre-Christian era as well as to modern and contemporary scholarship in Tamil arts and culture.

Dr. George Uglow Pope is remembered today in global Tamil scholarship for his poetic rendering of the English translation of *Thirukkural, Thiruvasakam* and *Naaladiyaaar*. He is said to have translated some extracts of *Cilappathikaaram* and *Manimekalai* and was considered the forerunner in Tamil philology.

Dr. Pope ventured to construct a theory of the *Draviḍian Family of Languages* but some of his postulations in recent times have been subjected to various critical re-examinations. As a linguist he was not only conversant in Tamil but also knew Telugu and Sanskrit. He composed a Tamil - English Dictionary and a Catechism of Tamil Grammar of which he published three volumes drawing from *Nannul and Yapparungalam*.



George Pope who was born in the small town of Bedeque, in Prince Edward Island on April 24, 1820 and went to South India at the tender age of nineteen as a member of the Church of England to the mission field of Sawyerpuram near Tuticorin in Tamilnadu.

To appreciate the intimate affection and love that Dr..Pope had for Tamil language, its ancient literatures and literary culture, it is important to place him in the larger historical context of the mid-nineteenth century India under the colonial rule of Britain which sought to denigrate native languages and cultures.

Just four years before George Pope set foot in India, the British government instituted a new educational policy to introduce English as the medium of instruction thereby cutting off all financial support to the native Hindu and Moslem schools and introduced English Literature and science as new curricula to the school desk.

The promulgation of this new educational policy in India was the brainchild of Lord Thomas B. Macaulay, a British historian and politician held in high esteem by the British Raj. In his well known 'Minute on Indian Education' he belittled Sanskrit and Arabic and proposed to make English the only medium of education.

His vision laden with racialist overtones enunciated that the British must "do our best to form a class of persons, Indian in blood and colour, but English in taste, in opinions, in morals and in intellect." The ultimate aim was to form a class of local collaborators who will serve as a kind of effective liaison between the British Raj and the millions governed by the former.

It is within this complex and adversarial arena that G.U. Pope began his missionary labour amidst a people and language of which he knew very little. But he was a right man at the right time. The mid-nineteenth century was a great time of Tamil revival and renaissance. With the discovery of *Tolkappiyam* and the magnificent *Sangam* poetical works, the world of Tamil literature was rising to a promising dawn of glory and splendour in that period, thanks to the efforts of U.Ve Saminatha Iyer and C. Y. Thamaotharampillai. These ancient literatures with their resourceful commentaries enabled Tamil scholars to proudly hold the Tamil classics on par with English classicism. At the same time there was a tendency among the English educated Tamil Literati to imitate the "Romantic forms and contents" of English poetry which were in vogue at that period. In the Preface that he wrote to the book *Thanippasuraththokai* by V.K. Sooriya Narayana Shasthiri, also known as Parithimartkalignar, Dr. Pope stated, "... we venture to express our opinion that Tamil verse, with all its incomparable ingenuity and elegance, generally fails in simplicity, intelligibility and adaptation to the wants of the popular mind.." Pope who has tasted the excellence and adorability of many ancient Tamil texts urged the Tamil Literati to refrain from imitating the old rigidity and make their poetry intelligible to the commoners.

It is in this context of resurgence within the Tamil literary world that we should endeavour to admire the audacious Tamil literary contributions of Dr. George Pope who infused new energy, vitality and vigour to Tamil scholarship.●



அ. முத்துலிங்கம்

# சொல்

சில மாதங்களுக்கு முன்பு சிறுகதை ஒன்று எழுதினேன். எனக்குத் திருப்தியாயில்லை. ஏதோ ஒன்று அதில் இருக்க வேண்டும், ஆனால் இல்லை. சிறுகதையை என்ன செய்வதென்றும் தெரியவில்லை. ஒரேயொரு வார்த்தைதான் தேவை. ஆனால் அது கிடைத்தபாடில்லை. அப்படியே கைவிட்டுவிட்டேன்.

ஒரு நாள் நண்பர் ஒருவர் வீட்டுக்கு வந்தார். அவர் பேசிக்கொண்டு போனபோது சாதாரணமாக ஒரு வார்த்தையைச் சொன்னார். அந்தக் கணமே நான் எழுதிவைத்த சிறுகதை பொலபொலவென்று உடைந்து இந்தப் புதிய வார்த்தையை உள்வாங்கிக் கொண்டது. அந்த வார்த்தை சேர்ந்ததும் கதைக்கு ஆன்மா கிடைத்துவிட்டது.

இப்படி எனக்கு மட்டுமல்ல பல எழுத்தாளர் -களுக்கு நடந்திருக்கிறது. நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர் அலிஸ் மன்றோ, 70 பக்கம் எழுதிவிட்டு அந்தச் சிறுகதையை தான் தூக்கி எறிந்ததாக என்னிடம் கூறியிருக்கிறார். கார்ல் இயக்னெம்மா என்ற எழுத்தாளர் எம்.ஐ.டி பல்கலைக்கழகத்தில் பேராசிரியர். பல சிறுகதைகளைப் பாதிவரை எழுதி மேலே தொடரமுடியாமல் மேசையில் வைத்திருக்கிறார். காரணம் அவர் தேடிய சொற்கள் கிடைக்கவி -ல்லை. சிறுகதை எழுதுவது என்பது சாதாரண விசயம் அல்ல, ஒவ்வொரு சிறுகதையும் ஒரு சாதனைதான்.

கொரோனாவுக்கு முன்னர் ஒருவரைத் தற்செய -லாக வீதியிலே சந்தித்தேன். 50 வருடங்களுக்குப் பிறகு பார்க்கிறேன். என்னோடு படித்தவர். அவர் முகம் திறக்கவில்லை. என்னைத் தெரியவும் இல்லை. பெயரைச் சொன்னேன். ஓ என்று கட்டிப்பிடித்தார். அந்தக் காலத்தில் நான் எழுதிய கதை ஒன்றில் காணப்பட்ட ஒரு வார்த்தையை சொன்னார். முகத்தை மறந்தாலும் வார்த்தையை மறக்கவில்லை. அது எனக்குப் பெரிய பாராட்டாக இருந்தது.

சில வருடங்களுக்கு முன்னர் பூசா சிறையில் நாலு வருடங்களைக் கழித்துவிட்டு வெளியே வந்த ஒருத்தர் டெலிபோனில் அழைத்தார். பூசா சிறை என்பது இலங்கையில் உள்ள சித்திர-வதைக்கூடம். அந்தச் சிறைக்கூடத்தில் அவருக்கு என் புத்தகம் படிக்கக் கிடைத்திருக்கிறது. அதில் தான் படித்த கதைகளைச் சொன்னார். சில வசனங்களை அப்படியே ஒப்பித்தார். 'எங்கே உங்கள் புத்தகம் வாங்கலாம்?' என்று கேட்டார். இப்படியும் ஒரு வாசகரா என்று என்னை வியக்கவைத்தது. இதுதானே ஓர் எழுத்தாளரின் சன்மானம். புகழோ, பணமோ பெரிதில்லை. உண்மையான பாராட்டுத்தான் அவரை எழுதவைக்கிறது. புறநானூற்றில் 'உண்டால் அம்ம' என்று தொடங்கும் பாடல் ஒன்றுள்ளது. கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி எழுதியது. பிறருக்காக வாழ்பவர்களால்தான் இந்த உலகம் சிறப்பாக இருக்கிறது என்று சொல்லும் பாடல். அது போலத்தான். எழுத்தாளர்கள் இயங்குவது இப்படியான பாராட்டுகள் மூலம்தான்.

பேராசிரியர் ஒருவர் தான் படித்த புத்தகத்தைப் பற்றி என்னிடம் சொன்னார். 'முன் அட்டைக்கும் கடைசி அட்டைக்கும் இடையில் உள்ள பக்கங்களை எல்லாம் வசனங்கள் நிரப்பியிருக்கின்றன. அங்கே இலக்கியமே இல்லை.' அதை நான் அடிக்கடி நினைக்கிறேன். நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர் காப்பிரியல் கார்சியா மார்க்குவெஸ் ஓர் இடத்தில் இப்படி எழுதுவார். 'பேனா காகிதத்தில் உரசி அவன் கையெழுத்தை உண்டாக்கியது.' எதற்கு இப்படி எழுத வேண்டும்? 'கையெழுத்திட்டான்' என்று எழுதலாமே. அதுதான் வசனத்துக்கும் இலக்கியத்துக்கும் உள்ள வித்தியாசம். இத்தனை வருடங்களுக்குப் பின்னரும் கார்சியா மார்க்குவெஸின் வரியை நான் நினைத்து வைத்திருக்கும் காரணமும் அதுதான்.

சுயவிவரக் குறிப்பு என்பதை நான் 'மெய்கீர்த்தி' என்றே சொல்கிறேன். சுயவிவரக் குறிப்பில் ஒருவரும் தங்கள் தோல்விகளைச் சொல்வதில்லை, பழைய கால அரசர்களின் மெய்கீர்த்திபோல. ஒரு பெண்ணின் சுயவிவரக் குறிப்பை சில வருடங்களுக்கு முன்னர் படித்தேன். இப்பொழுது அவர் பெரிய எழுத்தாளர். சுயவிவரக் குறிப்பில் இப்படி எழுதியிருந்தார். 'எங்கள் வீட்டில் அப்பாவும், தம்பியும், தட்டச்சு மெசினுமாக நாங்கள் வசிக்கிறோம். தட்டச்சு மெசின் விசைப்பலகையில் ஏறி ஓடக்கூடாதென பயிற்றப்பட்ட மூன்று பூனைகளும் எங்களுடன் வீட்டை பங்குபோட்டு-ள்ளன.' இவர் அப்பொழுதுதான் எழுதத் தொடங்கியிருந்தார். நான் சொன்னேன் இவர் பெரிய எழுத்தாளர் ஆவார் என. அப்படியே ஆனது. சொற்களை எப்படி பயன்படுத்த வேண்டும் என்பதை அவர் நுட்பமாக அறிந்திருந்தார்.

எழுத்தாளரின் முதல் கதையிலேயே அவர் நல்ல எழுத்தாளரா இல்லையா என்பது தெரிந்துவிடும். வார்த்தைகள் அந்தந்த இடங்களில் வந்து உட்கார்ந்துவிடும். எழுத்தாளர் எழுதி எழுதி வளர்வதில்லை. வண்ணத்துப் பூச்சிபோல அது பிறக்கும்போது இருக்கும் அளவுதான் எப்போதும். பின்னர் வளர்வதில்லை.

ஹெமிங்வேயின் மூன்றாவது மனைவி பெயர் மார்த்தா. மார்த்தாவை மணமுடித்து அவருடன் ஐந்து வருடம் வாழ்ந்தார். அந்த சமயங்களில் அவருடைய படைப்பூக்கம் உச்சத்தில் இருந்தது. ஒருநாள் மார்த்தாவிடம் சொன்னார் அவர் எழுதுவது போர் நாவலாக மாறிக்கொண்டிருப்பதாக. அவருக்கே அவர் எழுதுவது என்னவென்று திட்டமாகத் தெரியவில்லை. நாவல் முன்னே போக அதன் பின்னால் அவர் சென்றார். காதலும் நாவலும் வேகம் பிடித்து ஒரே கதியில் நகர்ந்தன. மார்த்தா இப்படிச் சொன்னார். 'நான் என்னுடைய காதல் எல்லாவற்றையும் உனக்கே தருகிறேன். அது போதாவிட்டால் பக்கத்து வீட்டில் கடன் வாங்கி தருகிறேன்.'

எழுதித் தள்ளிக்கொண்டே இருந்த ஹெமிங்வே ஒருநாள் இப்படிச் சொன்னார். "நான் தூண்டிலை கீழே இறக்கவேண்டியதுதான். வார்த்தைகள் அப்படி குவியலாக வந்து மாட்டுகின்றன.' 1954ல் அவருக்கு நோபல் பரிசு கிடைத்தது. ஏழு வருடங்கள் கழிந்தன. அவரால் எழுத்துக்கு திரும்பவும் வரமுடியவில்லை. வார்த்தைகள் அவரை விட்டு அகன்றன. ஒரு வார்த்தைக்காக காத்திருந்தார். அது நடக்கவே இல்லை. தன் துப்பாக்கியை எடுத்து தன்னை சுட்டுக் கொன்றார்.

அகராதியில் ஒரு வார்த்தை தூங்கும். சரியான ஒரு வசனத்துக்காக காத்திருக்கும். உலகத்தையே மாற்றக்குடிய சக்தி அந்த சொல்லுக்கு இருக்கும். அதைக் கண்டுபிடிப்பதில்தான் எழுத்தாளரின் வெற்றி உண்டு.

Indran B. Indrakrishnan MD FRCP (London); FRCP (C); FACP; FACG



# Esophageal Cancer

Esophageal cancer is cancer that occurs in the esophagus — a long, hollow tube that runs from the throat to the stomach. The esophagus helps move the food one swallows from the back of the throat to the stomach to be digested. Esophageal cancer usually begins in the cells that line the inside of the esophagus. Esophageal cancer can occur anywhere along the esophagus. Esophageal cancer is the sixth most common cause of cancer deaths worldwide. Incidence rates vary within different geographic locations. In some regions, higher rates of esophageal cancer may be attributed to tobacco and alcohol use or nutritional habits and obesity.

## Symptoms

* Difficulty in swallowing
* Weight loss
* Chest pain, pressure or burning
* Worsening indigestion or heartburn
* Coughing or hoarseness of voice

Early esophageal cancer may not exhibit any signs or symptoms.

**Types of esophageal cancer**

Esophageal cancer is classified according to the type of cells that are involved:

* **Adenocarcinoma.** This occurs most often in the lower portion of the esophagus. Adenocarcinoma is the most common form of esophageal cancer in the North America, and it affects primarily white men.

* **Squamous cell carcinoma.** This occurs most often in the upper and middle portions of the esophagus. Squamous cell carcinoma is the most prevalent esophageal cancer worldwide.

* **Other rare types.** Other rare forms of esophageal cancer include small cell carcinoma, sarcoma, lymphoma, melanoma and choriocarcinoma.

## Risk factors

* Gastroesophageal reflux disease (GERD). We discussed this condition in detail in the September 2021 issue.
* Smoking/ chewing tobacco
* Obesity
* Excess alcohol

**Complications**

* **Blockage of the esophagus.** This may make one difficult to swallow the food and liquid.
* **Pain.** Advanced esophageal cancer can cause pain.
* **Bleeding in the esophagus.** Esophageal cancer can cause bleeding.

## Diagnostic Tests

* Barium swallow X- ray study.
* Endoscopy with obtaining tissue sample.

Further tests can be done to stage the extent of the cancer and may include Bronchoscopy, Endoscopic ultrasound (EUS), Computerized tomography (CT) and Positron emission tomography (PET). The cancer staging system continues to evolve and is becoming more complex as doctors improve cancer diagnosis and treatment.

## Treatment

**Surgery:** This can be performed alone or in combination with other treatments. Surgery can be customized to remove the small tumors alone, part of the esophagus with or without the upper part of the stomach.

**Chemotherapy:** This is drug treatment that uses chemicals to kill cancer cells. Chemotherapy drugs are typically used before or after surgery. Chemotherapy can also be combined with radiation therapy.

**Radiation therapy:** It is most often combined with chemotherapy. It's typically used before surgery, or occasionally after surgery.

**Targeted drug therapy:** This focuses on specific weakness present within cancer cells. Targeted drugs are usually combined with chemotherapy for advanced esophageal cancer that doesn't respond to other treatments.

**Immunotherapy:** It is another type of drug treatment that helps the immune system to fight cancer. This might be used when the cancer is advanced, cancer has come back, or the cancer has spread to other parts of the body.

## Prevention of Esophageal Cancer

* Quit smoking & chewing tobacco
* Avoid excess Alcohol
* Eat plenty of fruits and vegetables.
* Maintain a healthy weight.

**Dr. Indran B. Indrakrishnan**
Adjunct Professor of Medicine - Emory University School of Medicine
GDC Endoscopy Center LLC and Gwinnett Digestive Clinic PC
475 Philip Blvd, Suite # 304, Lawrenceville, GA 30046
www.GDCEndoscopy.com



செந்தூரன் குணரத்தினம் - மனநல மருத்துவர்

# மனநலம் காப்பதும் எம் கடனே!

மனநலம் என்பது ஒரு இடர் வரும்போது தனிநபர் பொருளாதாரம் அல்லது சமூகம் சார்ந்த தொழிற்பாடுகளில் பாரிய தாக்கமில்லாமல் அந்தச் சூழ்நிலையைச் சமாளிக்க ஏதுவானநிலை எனப் பொருள் கொள்ளலாம். இந்தச் சமநிலை பிறழும் போது உள ஆரோக்கியத்தில் ஏற்படும் எதிர்மறைத்தாக்கமே உளநோய் ஆகும்.

எவ்வாறு உடலில் ஏற்படும் நோய்களில் பலவகைகள் உண்டோ அவ்வாறே உளநோய்களும் பல்வகைப்படும். எவ்வாறு உடலில் ஏற்படும் நோய்களின் வீரியம் மாறுபடுமோ அவ்வாறே உளநோய்களின் வீரியமும் பல்வேறு காரணிகளால் வேறுபடலாம்.

உடல்நோய்களின் தன்மைக்கேற்ப உரிய மருத்துவ உதவியை நாடும் நாம் மனநோய்க்கு உதவி நாடத்தயங்கி நிற்பது காலாகாலமாக விஞ்ஞான ரீதியாக பேசுபொருளாகிப் போனதொன்றாகி நிற்கிறது. உளநோய்சார் தப்பபிப்பிராயங்களும் அதுசார்ந்த அறியாமையும் இதற்கான காரணங்களில் முதன்மையானவை.

மனஅழுத்தம், மனப்பதற்றம், மனப்பிறழ்வு, மனவிருத்தி, குறைவுநிலை, மறதிநோய், மது மற்றும் போதைப்பொருள் பாவனை என்பன சில உளநோய் வகைகளாகும்.

குடும்ப வன்முறை, மணமுறிவு, குழந்தைகளின் மனச்சிதைவு, வாகன விபத்துகள், பொருளாதாரச் சீர்குலைவு, வன்முறை, கொலை மற்றும் தற்கொலை என்பன தகுந்த முறையில் உரிய நேரத்தில் குணப்படுத்தத் தவறிய உளநோய்களின் பாதிப்புகளாவன.

மிகப்பாரிய போரின் தாக்கத்தை எதிர்கொண்ட எமது சமூகம் உளநோய்களின் தாக்கத்துக்கு உள்ளாகும் தன்மை மிகவும் அதிகம். இந்தத் தாக்கத்தின் வெளிப்பாடு தலைமுறைகள் கடந்தும் பாதிக்கும் என்பது ஆய்வுகளின் முடிவு. பெருகிவரும் எமது மக்களின் தற்கொலை சார்ந்த மரணங்கள் இதற்கு ஒரு உதாரணம்.

பல்வேறு உளநலம் சார் அமைப்புகள் இது தொடர்பில் அளப்பரிய பணியாற்றி வருகின்றன. குடும்பநல வைத்தியர்கள் மனநல மருத்துவர்கள் உளவியலாளர்கள் ஆற்றுப்படுத்துனர்கள் சமூக சேவையாளர்கள் என பல்வேறு தளங்களில் உளநோய் சார்பான வைத்தியம் வழங்கப்படுகிறது. அவசர மருத்துவநிலையங்கள் மற்றும் மனநல மருத்துவ விடுதிகள் இடையறாது இயங்கிய வண்ணம் உள்ளன.

ஆனால் மனநோய்க்குள்ளான ஒருசாரார் தங்களின் நோய்நிலையைத் தாங்களே உணர முடியாத நிலைக்கு ஆட்படுவதால் அவர்களை உரிய நேரத்தில் மருத்துவ உதவிக்கு வழிப்படுத்துவது கடினமாகிப் போகிறது.

பாரிய மனநோய்த்தாக்கமுள்ளவர் தங்களது குடும்பவைத்தியரை நாடக்கூடத் தயங்குவர். அவர்கள் தற்கொலை எண்ணங்களுக்கு ஆட்படும் போதோ வன்முறைசார் எண்ணங்களிலோ அல்லது நடவடிக்கைகளில் ஈடுபடும்போதோ அல்லது உளநோயின் தாக்கத்தால் அவர்கள் பாரிய உடல்தாக்கத்துக்கு ஆளாகும் போதோ உரிய காலத்தில் அவர்களை அவசர மருத்துவ பிரிவுக்கு கொணர்வது அவசியம்.

இவ்வாறு மனநோயுள்ளவர் உதவி பெறத்தயங்கும் போது அவசர உதவியை தயங்காது அழைப்பது மூலமோ அல்லது அருகிலுள்ள சமாதான நீதவான் அலுவலகத்தை நாடுவதன் மூலமோ அவசர உதவியைப் பெற்றுத்தர முடியும்.

எவ்வாறு உங்களது குடும்ப உறுப்பினரொருவர் நெஞ்சுவலியால் அவதிப்படும் -போது நீங்கள் அவசர உதவியை அழைக்கத் தயங்குவதில்லையோ அவ்வாறே மனநோய்த்தாக்கம் உள்ளவர் மேற்குறிப்பிட்ட பாரதூரமான நிலையில் தன்னிலை மறந்து உரிய உதவி கோர மறுக்கும்போது அவசர உதவியை அழைப்பதில் சற்றும் தயங்கலாகாது.

உரிய நேரத்தில் உதவி கோரும்போது மனநோய் நிச்சயம் குணமடையும். தகுந்த முறையில் மருத்துவ உதவி பெறாத போது நோய் தீர்க்கப்படாமல் போகலாம். மரணமும் சம்பவிக்கலாம்.

எண்சாண் உடம்புக்கு சிரசே பிரதானம்! விழிப்படைவோம். சமநிலையான மனநலனே நல்ல ஆரோக்கியத்தின் அச்சாணி.

# Mental health issue in South Asian Community

A silent mental health crisis exists among South Asian communities. Many studies have shown that South Asian immigrants in Canada, the United States and the United Kingdom experience, sometimes higher than their peers. Some of the reasons include intergenerational conflict or the stress of adapting into western society. But mental health is deeply stigmatized in many South Asian communities and symptoms are often trivialized. To counter this, South Asian families need to be more deeply educated on risk factors that can lead to mental health conditions. With this knowledge, they can identify some of the early signs of mental health issues. Children of South Asian immigrants may face challenges associated with the pressure of straddling two different worlds.



கனகேஸ்வரி நடராஜா

# முகக்கவசம் முடிவுக்கு வராதா?

கிட்டத்தட்ட இரண்டு வருடங்களாக முகக்கவசம் அணிவதற்கு நாம் பழக்கப்பட்டு விட்டோம் என்று சொல்வதிலும் பார்க்க கட்டாயப்படுத்தப்பட்டு விட்டோம் என்று சொல்வதே பொருந்தும். இப்பொழுது ஒன்ராறியோவில் முகக்கவசம் கட்டாயமாக அணியத் தேவையில்லை. அவரவர் விருப்பத்துக்கும், விஜயம் மேற்கொள்ளும் இடத்தின் நிபந்தனைகளுக்கும் உட்பட்ட வகையில் அணியலாமென மாகாண அரசாங்கம் அறிவித்துள்ளது. கடந்த மார்ச் மாதம் 21ம் திகதியிலிருந்து இந்தச் சட்ட மாற்றம் நடைமுறைக்கு வந்துள்ளது.

ஆனாலும் முதியோர் இல்லங்கள், வயோதிபர் பராமரிப்பு இல்லங்கள், பாடசாலைகள் என்பவை இந்தத் தளர்வை பயன்படுத்துவதில் தயக்கம் காட்டுகிறார்கள். பொதுமக்களுக்கு முகக்கவசம் அணிவது போதும்போதும் என்றாகிவிட்டது. ஆனால் மனப்பயம் தீரவில்லை. தங்களின் பாதுகாப்புக் கருதியும் பிறரது பாதுகாப்புக் கருதியும் தொடர்ந்து முகக்கவசம் அணிவதற்கு முடிவு செய்துள்ளதாக பலரும் கூறுகின்றனர். அவ்வகையான பயத்துக்கு போதிய ஆதாரம் காணப்படுகிறது. இந்நோயினால் நாளாந்தம் இறப்போரின் தொகையும், பாதிக்கப்படுவோரின் தொகையும், அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்படுவோர் தொகையும் பொதுசனத் தொடர்பு சாதனங்கள் மூலம் பகிரங்கப்படுத்தப்படுகிறது. ஆரம்பகாலத்தில் கட்டாயமாக முகக்கவசம் அணியப்பட வேண்டுமென்றிருந்த நிலைமை மாறி, சட்டம் தளர்த்தப்பட்டாலும் தொடர்ந்தும் முகக்கவசம் அணியத்தான் போகிறோம் என்ற நிலைக்கு வந்துள்ளனர்.

முகக்கவசம் என்பது பல வருடகால வரலாற்றைக் கொண்டது. சிலருக்கு இது புதிதாக இருக்கலாம். 1910ம் ஆண்டில் மிகக்கொடிய நியுமோனியாத் தொற்று சீனாவில் ஏற்பட்டபோது அந்நாட்டு அரசாங்கம் டாக்டர் Wu Lien teh என்பவரை இதற்கான ஆராய்ச்சியில் ஈடுபடுத்தியது. அவர் முதலாவதாக சுகாதார முகக்கவசத்தை (surgical mask) தயாரித்தார். இதனை பருத்தியினாலும் செயற்கைத் துணியாலும் உருவாக்கினார். இவரையே முகக்கவசத்தின் ஆரம்பகர்த்தா என கருதுகிறார்கள்.

அதே வருடம் அமெரிக்காவின் சுரங்கத் தொழிலாளர் சம்மேளனம் சரியானதொரு முகக்கவசத்தை அறிமுகம் செய்யும் முயற்சியில் ஈடுபட்டது. அக்காலத்தில் பெருமளவு சுரங்கத் தொழிலாளர்கள் சுவாச நோய்கள் காரணமாக இறந்தனர். அப்போதைய முகக்கவசங்கள் தோற்றத்தில் பெரியனவாகவும், நச்சுவாயுக்களிலிருந்து பாதுகாப்பளிக்கும் கவசங்களின் தோற்றத்தையும் ஒத்திருந்தன.

1920ம் ஆண்டில் இதே தொழிலாளர்கள் சம்மேளனம் மூச்சை இலகுவாக விடக்கூடிய முகக்கவசத்தை அறிமுகம் செய்தது.

இரண்டாம் உலக மகாயுத்தம் முடிவடைந்த பின்னர் தொழிலாளரின் நலனிலும் பாதுகாப்பிலும் பெரிதும் அக்கறை காட்டப்பட்டதாக 3M's என்ற நிறுவனத்தின் பாதுகாப்புக்குப் பொறுப்பான அதிகாரி நிக்கோல் வான் மக்லோ தெரிவித்துள்ளார். 1963ம் ஆண்டில் கிண்ண வடிவிலான முகக்கவசங்களின் விளம்பரங்கள் பத்திரிகைகளில் வெளிவந்தன. இவை இறுக்கமாகவும், கிருமிகளை வடிகட்டக்கூடியதாகவும் இருந்ததாக இவர் கூறியுள்ளார். அத்துடன் இலகுவாக மூச்சுவிடக்கூடியதாகவும் இவை அமைந்திருந்தன.

தைவானைச் சேர்ந்த அமெரிக்க விஞ்ஞானியான Peter Tsai என்பவரே 1995ல் N95 என்ற முகக்கவசத்தை கண்டுபிடித்தார். இதுவே இன்று தரமான ஒன்றாகக் கருதப்படுகிறது. N என்பது Non oil (எண்ணெய் அற்றது) என்பதைக் குறிக்கும். 1990களில் மருத்துவ மனைகளில் சத்திரசிகிச்சை முகக்கவசங்களுக்குப் பதிலாக இலகுவாக மூச்சு விடக்கூடிய முகக்கவசங்கள் பாவனைக்கு வந்தன.

கொரோனா நோய்ப் பரவல் ஆரம்பித்த காலத்திலிருந்து N95 முகக்கவசமே அதிகூடிய நோய்த்தடுப்புக் கொண்டதென கருதப்படுகிறது. ஆயினும் இவற்றின் தட்டுப்பாடு காரணமாக சுகாதார தொழிலாளர்களுக்கே இவைகள் பெருமளவில் வழங்கப்பட்டன. பொதுமக்கள் துணியினால் செய்யப்பட்ட முகக்கவசங்களையே அணிந்தனர். நாளடைவில் பல நாடுகளும் தாங்களே தங்கள் நாட்டு மக்களுக்குத் தேவையானவற்றை தயாரிக்கத் தொடங்கின.

N95 என்ற பெயர் நாட்டுக்கு நாடு வேறுபட்டது. சீனாவில் KN95 என்றும் தென்கொரியாவில் KS94 என்றும் கனடாவில் 95PPE என்றும் அழைக்கப்படுகின்றன. கனடாவில் இப்போது பத்து வரையான தொழிற்சாலைகளில் பாதுகாப்பான முகக்கவசங்கள் தயாரிக்கப்படுகின்றன. இதனால் தரமான முகக்கவசங்களுக்கு தட்டுப்பாடு காணப்படவில்லை. கொரோனா தொற்று காணப்பட்ட ஆரம்பத்திலேயே N95 முகக்கவசம் எல்லோருக்கும் கிடைத்திருந்தால் அதன் பரவலை பெரிதளவு கட்டுப்படுத்தியிருக்க முடியுமென பென்சில்வேனியாவைச் சேர்ந்த கணக்காளர் லோறி ஹக்கின்ஸ் அபிப்பிராயம் தெரிவித்துள்ளார்.

சூரனுக்கு தலையை வெட்ட வெட்ட புதுத்தலைகள் முளைத்ததாக புராணக் கதைகள் கூறுகின்றன. அதுபோலவே எவ்வளவு பாதுகாப்பு விதிகளை அறிமுகப்படுத்தினாலும் கொரோனா பல்வேறு உருவங்களை எடுத்து மக்களைப் பயமுறுத்தியவாறு இருக்கிறது. முகக்கவசம் அணிவது கட்டாயம் இல்லையென்றாலும் மக்கள் தொடர்ந்தும் அதனை அணிந்தால் தொற்றின் பரவலைக் கட்டுப்படுத்தலாமென கனடாவின் பிரதம மருத்துவ அதிகாரி திரேசா ராம் கூறியுள்ளார்.

அவரின் கூற்றை மெய்ப்படுத்துவதுபோல ஒன்ராறியோ மாகாணத்தில் மார்ச் 21ம் திகதிக்குப் பின்னர் கொரோனாவின் பரவல் நாளாந்தம் பல மடங்கு அதிகரித்துள்ளது. மக்கள் எத்தனை நாட்களுக்குத்தான் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பாமல் இருக்க முடியும். "தடுப்பூசிகள் எடுத்திருக்கிறோம்தானே நோய் தொற்றினாலும் அதன் வீரியம் பெரிதாக இருக்க மாட்டாது" என தம்மைத்தாமே ஆறுதல்படுத்திக் கொண்டு மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பியவாறு இருக்கிறார்கள். முகக்கவசத்தை அணிந்தவாறே இனி வாழப்போகிறோம் - சிறுபிள்ளைகள்தான் பாவம்.



இரா. சம்பந்தன்

# கம்பர் சித்திரம் - 5

## யார் உயர்ந்தவர்கள்?

சில வேளைகளில் முன்னாலே கேட்டுக் கொண்டிருப்பவன் கண்ணன் என்று தெரியாமலேயே கீதை உபதேசம் செய்து வாழ்க்கையில் நாம் அவமானப்பட வேண்டியதாகப் போய்விடுகின்றது. ஒரு முறை மார்கழி மாதம் அமைதியாக சென்னை வானொலியில் இசைவிழா கேட்டுக் கொண்டிருந்த அப்பாவிடம் கம்பனும் சில இடங்களில் உலகியல் மரபுகளை எதுகை மோனைக்காக உடைத்து கவிதை செய்திருக்கிறான் என்னும் போது இக்காலக் கவிஞர்கள் தப்புச் செய்வதில் என்ன குற்றம் என்று கேட்டுவிட்டேன்.

அன்று காலையில் வெளிவாரிப் பட்டப்படிப்பு வகுப்பில் தமிழ் ஆசியர் ஆற்றிய விரிவுரையில் அந்தச் செய்தியை நான் அறிந்தது முதல் பழங்காலப் பண்டிதர்களுக்கு கிளிப்பிள்ளை போல இலக்கியங்களை ஒப்புவிக்கத் தெரியுமே தவிர ஆழ்ந்த ஆய்வுத்திறன் அவர்களுக்கு பட்டதாரிகளைப் போல கிடையாது என்று எண்ணியிருந்தேன். அந்த எண்ணத்தின் வெளிப்பாடே எனது கேள்வியாக அமைந்தது.

காடு சென்ற இராமனை மீண்டும் நாட்டுக்கு அழைத்து வருவதற்காக தாய்மார் மூவருடன் கங்கைக் கரைக்கு வந்த பரதன் அவர்களைக் குகனிடம் அறிமுகம் செய்துவைக்கும் பகுதியிலிருந்து ஒரு செய்யுள். அந்தப் பாடல் இராமனின் தாயான கோசலையை குகனுக்கு பரதன் அறிமுகம் செய்யும் காட்சியைச் சொல்வது.

சுற்றத்தவர்களும் தேவர்களும் தொழுது வணங்க நின்ற கோசலையைப் பார்த்துத் தானும் வணங்கிக் கொண்டு, இந்த அம்மா யாரென்று பரதனிடம் குகன் வியப்போடு கேட்டான். இதனைக் கம்பன் சுற்றத்தார் தேவரொடு தொழ நின்ற கோசலையைத் தொழுது நோக்கி என்று சொன்னான். காலையில் தமிழ் வகுப்புப் பிரச்சனை இது தான்.

சுற்றத்தார் மனிதர்கள். அவர்களை விட தேவர்கள் உயர்ந்தவர்கள். எனவே கம்பன் தேவர்களைத்தான் முதலில் சொல்லியிருக்க வேண்டும். அவனின் பாடல் தேவரொடு சுற்றத்தார் என்று தொடங்கியிருக்க வேண்டும். அதுதான் தமிழ் மரபு. ஆனால் கம்பன் இந்த நெறிமுறையைக் கடைப்பிடிக்கவில்லை. கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பனே இப்படி வசதிக்கு ஏற்றபடி பாடும்போது இக்காலக் கவிஞர்களை நாம் குற்றம் சொல்வது தவறு என்பது காலை விரிவுரை உபதேசத்தின் முடிவாயிற்று. அது எனக்கும் உடன்பாடானது மட்டுமல்ல புதிய செய்தியாகவும் தெரிந்தது.

அப்பா கேட்டார் - கோசலையைத் தேவர்கள் ஏன் கும்பிட்டார்கள், சுற்றத்தார் ஏன் கும்பிட்டார்கள் என்று உனக்குத் தெரியுமா. இல்லை என்றேன் நான். சற்று நேரம் கண்களை மூடிக்கொண்டு இருந்த அப்பா சொல்லத் தொடங்கினார்.

இராவணன் இறைவனிடம் வரங்களைப் பெற்றுக் கொண்டு அந்த வல்லமையால் தேவர் உலகத்துக்குள் புகுந்து குபேரனிடம் இருந்த புஸ்பக விமானத்தை பறித்துக் கொண்டான். திசை யானைகளோடு தேவையற்ற போரைச் செய்து தந்தங்களை முறித்தான். தேவர்களைத் துன்பப்படுத்தினான். எனவே அவனின் அழிவை எதிர்பார்த்திருந்த தேவர்கள் சீதையோடு இராமன் காட்டுக்கு வந்தது தங்களுக்கு நல்ல வாயப்பு என்று எண்ணினார்கள்.

காட்டிலே இராவணன் சீதையைத் தூக்கிப் போவான். அவளை மீட்பதற்காக இராவணனை இராமன் கொலை செய்வான். இவையெல்லாம் நடக்காமல் இராமனைத் திரும்பவும் நாட்டுக்கே அழைத்துப் போகும் வல்லமை கோசலைக்கு மட்டுமே உண்டு. எனவே அந்தக் காரியத்தைச் செய்து விடாதே - இராவணன் அழிவைத் தடுத்து விடாதே என்று தேவர்கள் கோசலையை வணங்கினார்கள்.

சுற்றத்தார் பிரச்சனையோ வேறு. அரசன் ஏற்கனவே இறந்து விட்டான். இராமன் நாடு துறந்து காட்டுக்கு வந்து விட்டான். பரதனோ எனக்கு ஆட்சி வேண்டாம். இத்தனைக்கும் காரணமான கைகேயியை வெட்டுவேன் என்று நிற்கின்றான். நாடே குழப்பத்தில் இருக்கின்றது. எப்படியாவது மேற்கொண்டு செல்லவிடாது இராமனை நீ திரும்ப அழைத்து வந்துவிடு. இராமனும் சீதையும் பரதனும் நாமும் பழையபடி நன்றாக வாழ்வோம் என்று வணங்குகின்றார்கள்.

தேவர்களின் வணக்கத்துக்குள் இராமன் எப்படிப் போனால் என்ன, இராவணனின் அழிவு நடந்தால் போதும் என்ற சுயநலம் அடங்கியிருக்கின்றது. ஆனால் சுற்றத்தார் வணக்கத்துக்குள் எப்படியாவது இராமனைத் துன்பப்பட அனுமதிக்காது திருப்பி அழைத்துக் கொண்டு போய்விட வேண்டும் என்ற பொதுநல சிந்தனை இருக்கின்றது. அதனால் தேவர்களின் வணக்கத்தை விட சுற்றத்தார் வணக்கம் உயர்ந்தது என்று கம்பன் எண்ணினான்.

எனவே தன் பாட்டிலே சுற்றத்தாரை தூக்கி முதலிலே போட்டு தேவர்களை பின்னாலே சொன்னான் கம்பன். கம்பனின் நாவிலே சரசுவதி குடியிருந்தாள். எதுகை மோனைக்காக அவன் அலையும் நிலையை அவள் அவனுக்கு வைக்கவில்லை என்றவர் யார் இப்படி உனக்குத் தப்பாக சொல்லித் தந்தது என்று கேட்டார்.

யாருமில்லை நானாக நினைத்துக் கேட்டேன் என்று முடித்துக் கொண்டேன் நான். அம்மா சதி செய்து சம்பாதித்துத் தந்த சொத்தை உரியவர்களிடமே கொடுக்க வரும்போது யாராவது நீங்களெல்லாம் அவருக்கு யார் கேள்வி கேட்டால் ஒரு மனிதன் மனம் எவ்வளவு துன்பப்படும் என்ற உணர்வை அப்படியே வார்த்தையில் வடித்த கம்பன் பாடல் இதுதான்.

சுற்றத்தார் தேவரொடும் தொழ நின்ற
    கோசலையைத் தொழுது நோக்கிக்
கொற்றத் தார்க் குரிசில் இவர் ஆர் என்று
    குகன் வினவக் கோக்கள் வைகும்
முற்றத்தான் முதல் தேவி மூன்று உலகும்
    ஈன்றானை முன் ஈன்றானைப்
பெற்றத்தால் பெறும் செல்வம் யான்
    பிறத்தலால் துறந்த பெரியாள் என்றான்.

(கம்பராமாயணம் - கங்கை காண் படலம்)●



வேதநாயகன் தபேந்திரன்

# தமிழ்ச் சினிமா - தென்னகமும் ஈழமும்

**காட்சி 1**

“அன்னக்கிளி ஒன்னத் தேடுதே, ஆறு மாசம் ஒரு வருசம் ஆவரம்பூ மேனி வாடுதே -

நதியோரம் பொறந்தேன், கொடி போல வளர்ந்தேன் மழையோடும் வெயிலோடும், மனம் போல் நடந்தேன்”.

1977ம் ஆண்டின் நினைவு ஒன்று மனதைக் கிளறியது. அந்த வருடம் வடமராட்சி அல்வாய் வடக்கில் உறவுக் குடும்பமொன்றில் திருமணம். வேளைக்கே பெட்டி கட்டி திருமணத்திற்காக ஊருக்குப் போய் விட்டோம். திருமணம் முடிந்து நாலாம் நாள் படம் பார்க்க வேண்டுமென்று பெருசுகளுக்கு ஆசை.

சிறுசுகளான எம்மை விடுவார்களா, சேர்த்துத்தானே கூட்டிக்கொண்டு போகவேண்டும். அப்போது பட்டி தொட்டியெங்கும் இளையராஜாவின் இசை மழையில் அன்னக்கிளி படத்தின் பாடல்கள் ஒலித்தது.

ஆறரைக்கு நெல்லியடி லட்சுமி தியேட்டரில் படம் பார்ப்பதற்காக மாலை 5 மணிக்கே உறவுகள் 40 பேரளவில் சேர்ந்து நடக்கத் தொடங்கினோம். அரை மணித்தியால நடையில் தியேட்டர் வந்தது. படம் பார்க்கும் ஆவலில் அவ்வளவு உற்சாக நடை.

எமது உறவுகளில் பெண்களும் வந்ததால் காந்தி கிளாஸ் எனப்பட்ட கலரியில் இல்லாமல் முதலாம் வகுப்பிற்கு ரிக்கெற் எடுத்தார்கள். ஆறரை மணிக்கு படம் தொடங்கியது. இளையராஜா என்ற இசை மாமேதையைத் தமிழுக்குத் தரும் படமென எமக்குப் புரியாத பருவம்.

சிவகுமார், சுஜாதா ஜோடி நடிப்பில் கறுப்பு வெள்ளையில் களை கட்டிய படம். மச்சானைப் பார்த்தீங்களா மலைவாழைத் தோப்புக்குள்ள என்று ஆடிப் பாடிய போது கதிரையில் இருந்த எமது கால்களும் கைகளும் உற்சாகமாகவே ஆடின.

இடைவேளை நேரத்திற்கு ஆளுக்கு ஒரு கச்சான் பக்கற் கிடைத்தது. கேஎவ்சிகளும் பிஸ்ஸாக்களும் இல்லாத ஆனந்தமான உலகல்லவா அது. காதல், சோகம் என அன்னக்கிளியை ரசித்து விட்டு ஒன்பதரை போல வெளியே வந்தோம். அப்படியே உறவுகள் யாவரும் கூடி நடந்து “அன்னக்கிளி ஒன்னத் தேடுதே.....” பாடலை மாறி மாறிப் பாடி வந்தோம். “சொந்தமில்லை, பந்தமில்லை வாடுது ஒரு பறவை”, சோகப் பாடலையும் பாடியவாறே வந்தோம். அந்த வாழ்வின் இனிமையை எண்ணி எண்ணி மனம் இன்றும் ஏங்குகிறது.

**காட்சி 2**

எங்களது யாழ்ப்பாண உறவுக்குள் ஒரு கல்யாணம். கல்யாண வீடு முடிந்து ஐந்தாம் நாள் அமுது மாமா சொன்னார் வாருங்கள் யாழ்ப்பாண ரவுணுக்குப் போய் படம் பார்ப்போமென. யாழ் நகர் போய் வி.பி. கணேசன் (இன்றைய அரசியல்வாதி மனோ கணேசனின் அப்பா) நடித்த நான் உங்கள் தோழன் படம் பார்த்தோம். இது 1978ம் ஆண்டு வெளிவந்த ஈழத்து தமிழ்த் திரைப்படம். இதே ஆண்டில் மொத்தம் 6 ஈழத்துத் தமிழ்த் திரைப்படங்கள் வெளியிடப்பட்டமை இலங்கை தமிழ் திரைப்பட வரலாற்றில் ஒரு சாதனை. அவற்றுள் முதலாவது திரைப்படந்தான் நான் உங்கள் தோழன். தொழிற்சங்கத் தலைவர்களில் ஒருவரான வி. பி. கணேசன் தனது முதலாவது படமான புதிய காற்றுக்கு கிடைத்த வரவேற்பைத் தொடர்ந்து எடுத்த திரைப்படம்.

அவரே இந்தமுறையும் பிரதான பாத்திரத்தில் நடித்தார். சுபாஷினி, கே. ஏ. ஜவாஹர், எஸ். ராம்தாஸ், எம், எம், ஏ. லத்தீப், ருக்மணி தேவி போன்ற பலரை தன்னுடன் நடிக்கவைத்தார். எஸ். வி. சந்திரன் இத்திரைப்படத்தை இயக்கினார். அவரே படத்தொகுப்பாளரும் கூட. எம். கே. றொக்சாமி இசையமைக்க, சாந்தி, முருகவேள், சாது ஆகியோர் இயற்றிய பாடல்களை வி.முத்தழகு, கலாவதி, கே. எஸ். பாலச்சந்திரன், மொஹிதீன் பெக், கனகாம்பாள் ஆகியோர் பாடினார்கள்.

கொழும்பு, மலையகம் என்பவற்றோடு யாழ்ப்பாணத்து நகர வீதிகளிலும், மட்டக்களப்பு மாமாங்கத் திருவிழாவிலும் படப்பிடிப்பு நடத்தினார்கள். அந்தப் படத்தைப் பார்த்து விட்டு - நான் உங்கள் தோழன் எந்த நாளுமே நல்ல நண்பன் என்ற பாடலைப் பாடியபடியே வந்தோம்.

ஈழத்துத் திரைப்படங்கள் வந்த ஒரு பொற்காலம் இருந்தது. காத்திருப்பேன் உனக்காக, பொன்மணி, கோமாளிகள், சமுதாயம், பாசநிலா, அவள் ஒரு ஜீவ நதி, அனுராகம், இரத்தத்தின் இரத்தமே, எங்களில் ஒருவன், ஏமாளிகள், கடமையின் எல்லை, குத்துவிளக்கு, கோமாளிகள், டாக்ஸி டிரைவர், தெய்வம் தந்த வீடு, தென்றலும் புயலும், தோட்டக்காரி, நெஞ்சுக்கு நீதி, பாச நிலா, பாதை மாறிய பருவங்கள், நாடு போற்ற வாழ்க, நிர்மலா, புதியகாற்று, மஞ்சள் குங்குமம், மாமியார் வீடு, மீனவப்பெண், வாடைக்காற்று, வெண்சங்கு, அன்புள்ள அவள் என்றவாறு ஈழத்துப் படங்களது பட்டியல் உள்ளது. தென்னிந்திய சினிமா மோகத்திலிருந்து எமக்கான சினிமாவை உருவாக்க நடத்தப்பட்ட போராட்டத்தின் பெறுபேறுகள்தான் இந்தப் படங்கள்.

எனது உயிரும் மூச்சும் சினிமா தான் என்று வாழ்ந்தவர்களின் உழைப்புத் தான் இந்தப் படங்கள். ஓரிரு படங்கள் தான் வியாபார ரீதியில் வெற்றிபெற்றன.

நெடுந்தீவில் பருவகாலத்தில் வாடியடித்து மீன் பிடிக்கும் மீனவரின் வாழ்க்கை முறையைச் செங்கை ஆழியான் வாடைக்காற்று நாவலாக வடித்திருந்தார். அந்த நாவல் புனைவுகள் பல கலந்த உண்மைத் தன்மை குறைந்தது என்ற விமர்சனம் நெடுந்தீவு மக்களிடமுள்ளது. ஆயினும் அது திரைப்படமாகி வந்த போது தயாரிப்பாளரைப் பொருளாதார ரீதியில் கடிக்காமல் விட்டது. ஈழத்து திரைப்படங்களுக்காக தமது வாழ்நாளை அர்ப்பணித்துக் கடன்காரராக வாழ்க்கையைத் தொலைத்து வறுமையில் உழன்றவர்களும் உள்ளனர். இறக்குமதிச் சரக்குகளை உசத்தியாகப் பார்க்கும் எமது மனோபவம்தான் ஈழத்துச் சினிமாக்களின் தோல்விகளுக்குக் காரணம்.

விடுதலைப் புலிகளின் காலத்தில் தமது போராட்ட நடவடிக்கையின் ஒரு பகுதியாக குறுந்திரைப்படங்களையும் முழுநீளப் படங்களையும் எடுத்தார்கள். உறங்காத கண்மணிகள், உயிராயுதம் ஆகியவை பார்க்க முடிந்த படங்கள். போர்க்காலத்தில் நடைபெற்ற சினிமா முயற்சிகள் தனியாக ஆராயப்பட்டு ஆவணப்படுத்தப்பட வேண்டியவை.

சினிமா என்பது கனவுத் தொழிற்சாலை என்கிறோம். ஆனால் சினிமா கவர்ந்தளவு வேறு ஊடகம் மக்களைக் கவர்ந்ததா என்பது கேள்விக்குரியது. இன்றும் விடாப்பிடியாக இலங்கைத் தமிழுக்குரிய சினிமா அடையாளத்தை ஏற்படுத்த படம் எடுப்பவர்கள் சிலர் உள்ளனர். நாமும் தென்னிந்திய சினிமாவில் தோய்ச்சு எடுக்கப்பட்டவர்களாகவே வாழத் தலைப்பட்டு விட்டோம்.



கனடா மூர்த்தி

# தாய் மண்ணே வணக்கம்! - 26

தாய்லாந்து நாட்டின் கலை, கலாசார வளர்ச்சி இந்திய துணைக்கண்டத்தின் பங்களிப்புடன் ஆரம்பமாகிப் பின்னர் தனக்கே உருவான வடிவத்தை எடுத்திருக்கிறது. சிற்பக்கலை, எழுத்துருக்கள் என்பனவும் அவ்வளர்ச்சியில் அடங்கும். இங்கு இந்தியத் துணைக்கண்டம் என்று நாம் குறிப்பிட்டாலும், தமிழ் நிலத்தின் பங்களிப்புத்தான் அவ்வளர்ச்சியில் மிகுந்து காணப்படுகிறது.

ஆனால் இப்பங்களிப்புகள் பற்றி தமிழர்கள் நாம் மேலோட்டமாகத்தான் தெரிந்து வைத்தி - ருக்கிறோம். தாய்லாந்திற்கும் தமிழகத்திற்கும் இருந்திருக்கக்கூடிய கலாசாரப் பரிவர்த்தனை குறித்த ஆழமான ஆய்வுகள் நம்மால் அதிகமாகச் செய்யப்படுவதில்லை. நமக்கு மட்டுமா, ஒரு சராசரி தாய்லாந்துக்காரருக்கே கூட தமது கலாசாரத்தை வளப்படுத்திய தமிழர்கள் குறித்த புரிதல் இல்லவே இல்லை.

இந்த எண்ணங்கள் ஒடி மனம் குறுகுறுத்தது. எம்மோடு நின்றிருந்த பெண்மணியைப் பார்த்து, “உங்கள் நாட்டுடனான பண்டைய கலாசாரப் பரிவர்த்தனைகள் இந்தியாவுடன் நடந்திருக்கிறது... இந்தியாவைப் பொறுத்த - வரை வட இந்தியா, தென் இந்தியா என இரு கலாசாரத் தனித்துவங்கொண்ட பகுதிகளாக இந்தியா பிரிந்திருக்கிறது. இதில் எந்தப் பகுதியுடன் ஒரு காலத்தில் உங்கள் மூதாதை - யர் தொடர்பிலிருந்தார்கள் என்பது தெரியுமா..?” என நான் ஆரம்பிக்க அவர் இடைமறித்தார்.

“தெரியும். தெரியும். எங்களது கலாசாரம் வளர்ந்துவரும் நிலையிலிருந்த காலகட்டத்தில் அதற்குப் பெரும் பங்களித்தவை பிராஹ்மனிஸ்ம் என்று தற்போது நம்மால் அழைக்கப்படும் இந்து மதமும், அதன் பகுதியான சம்ஸ்கிருத மொழியும், கூடவே பிராமணர்களும்தான். அவற்றுக்குப் பின்னர் பௌத்த மதமானது எங்கள் கலாசார வளர்ச்சியில் இன்றுவரை பிரிக்க முடியாதபடி பின்னிப்பிணைந்திருக்கிறது. ஆகவே புத்தர் பிறந்த வட இந்தியாதான் எம்முடன் பெரும் தொடர்பில் இருந்திருக்கிறது என்றுதான் நான் நம்புகிறேன்.” என்றார்.

அரும்பொருளகப் பணியாளரும் அருகில் வந்து உரையாடலில் கலந்து கொண்டார். “அப்படித்தான் இங்கு நாமெல்லாம் நினைக்கிறோம். ஆனால் நமது கலாசார வளர்ச்சிக்குத் தொடர்ச்சியாகப் பெரும் பங்காற்றியது தென்னிந்தியாதான்” என்றார் அரும்பொருளகப் பணியாளர். நான் ஆம் என்று தலையசைத்தேன். எம்மோடு நின்றிருந்த பெண்மணிக்கு அரும்பொருளகப் பணியாளரின் கூற்று புரியாத நிலை இருந்திருக்க வேண்டும். தஸானி வேடிக்கை பார்த்தபடி நின்றாள்.

“நீங்கள் எப்படி அப்படிச் சொல்லலாம்? சமஸ்கிருதம் வட இந்திய மொழி. பௌத்தம் வட இந்தியாவில் உருவாகிய மதம். ஆகவே வட இந்தியாதான் தாய்லாந்தின் கலாசார வளர்ச்சிக்குப் பங்காற்றியது என்றுதானே நாம் சொல்லவேண்டும்.” என்றாள் தஸானி வேண்டுமென்றே. அந்தப் பெண்மணியும் அதை ஏற்பதுபோலத் தலையசைத்தார்.

நான் சிரித்துக் கொண்டே, நமக்கெல்லாம் தெரிந்த ஒன்றை அவரிடம் சொன்னேன். “இதோ பாருங்கள்.. சமஸ்கிருதமும், பௌத்தமும் வட இந்தியா உலகிற்குத் தந்த கலாசாரச் செல்வங்கள். ஒரு காலத்தில் சமஸ்கிருத பாண்டித்தியம் என்பது இந்தியா முழுவதுக்கும் தேவைப்பட்டதொரு தராதரமாக இருந்திருக்கிறது. ஆதலால் அக் காலத்தில், தென்னிந்தியர்களிடம் குறிப்பாக தமிழ்நிலத்தில் சமஸ்கிருதப் பாண்டித்தி - யம் மிக மிகச் செழிப்போடிருந்தது. அதேபோல, பௌத்த மதமும் தென்னிந்தியாவில் ஒரு காலத்தில் மிக வேகமாகப் பரவி நிலை கொண்டு, அதன் பின்னர்தான் ஒதுக்கிவைக்கப்பட்டது. வட இந்தியாவின் நாலந்தாவிற்குப் பின்னர், பௌத்த மதக் கல்விக்கான மிகப் பெரும் நிலையமாக தென்னிந்தியாவிலிருந்த காஞ்சி அமைந்திருந்தது. ஆக, தாய்லாந்தின் கலாசார வளர்ச்சி என்பது வட இந்திய ஏதனங்களைக் கொண்டு தென்னிந்தியரால் செய்யப்பட்டவை. கல்வெட்டுக்களும் ஏனைய தொல்லியல் பொருட்களும் அதைத்தான் நிறுவி நிற்கின்றன” என்றேன்.



அந்தப் பெண்மணி “அப்படியானால் ஏன் தென்னிந்தியா பற்றிய அறிவூட்டல்கள் அதிகமாக செய்யப்படுவதில்லை?” என்று அப்பாவியாகக் கேட்டார். அதற்கான பதில் எனக்கும் தெரியவில்லை. தமிழர்கள் நாம் பழைய பெருமை பேசுகிறோமே தவிர, அவற்றை ஆதாரபூர்வமாக நிறுவி உலகெங்கும் எடுத்துச் செல்லும் பணியைச் செய்வதில் குறைபாடு உடையவர்களாகத்தான் இருக்கிறோம் என்பதை அவரிடம் சொல்ல முடியுமா என்ன?

இவ்வாறு நாம் பேசிக்கொண்டிருக்கையில் அந்தப் பெண்மணி தனது அறைக்கு விரைந்து ஒரு சஞ்சிகையை எடுத்து வந்தார். Southeast Asian Regional Centre for Archaeology and Fine Arts அமைப்பு 1985ம் ஆண்டு வெளியிட்ட SPFAJournal சஞ்சிகை அது. அதனை விரித்து அதிலிருந்த Inscriptions from South Thailand கட்டுரையிருக்கும் சில பக்கங்களைக் காட்டினார். “இந்த கட்டுரையில் நக்கோன் சி தம்மாராத் பகுதியிலிருந்தும், அதைச் சூழ இருக்கும் கிராபி, சுரத்தானி ஆகிய இரண்டு இடங்களிலுமிருந்தும் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்களை ஆவணப்படுத்தியிருக்கிறார்கள். இந்தக் கோயிலில் இருக்கும் கல்வெட்டுக்கள் குறித்தும் இதில் எழுதப்பட்டிருக்கிறது. பாருங்கள்..” என்றார்.

புரட்டிப் பார்த்தேன். 15 பக்கங்கள் கொண்ட கட்டுரை அது. அதில் அதுவரை அப்பகுதியில் கண்டெடுக்கப்பட்ட 17 கல்வெட்டுக்கள் குறித்த விபரங்கள் வரிசைப்படுத்தப்பட்டிருந்தன. மேலும் இந்தக் கோவிலில் இருக்கும் தமிழ்க் கல்வெட்டுக் குறித்தும் ஒரே ஒரு சிறு பந்தி இருந்தது. அதிக விபரங்கள் இல்லை. ஆனைக்கோட்டை படிமம்போன்ற வடிவில், அச்சுக்களாக கருதப்படும் 7 சிறு முத்திரைப் படிமங்களைக் குறித்தும் விபரங்கள் அட்டவணைப்படுத்தப்பட்டிருந்தன. அந்தக் கட்டுரையை நான் மேலோட்டமாகப் படித்துப் பார்த்தபோதே, அதிலிருந்த சில பகுதிகள் கவனத்தைக் கோரின. ஒரு வகைக் கோபமும் உருவானது.

(இன்னும் வரும்)



எஸ். ஜெகதீசன்

# மிளிரும் மகாராணி

எலிசபெத் அலெக்ஸாண்ட்ரா மேரி வின்ஸர் பிரித்தானிய சாம்ராஜ்ஜியத்தின் அரசியாகி 70 வருடங்கள் தொடர்ந்து ஆட்சி புரியும் ஒரே ஒரு மாதரசி என வாழ்வு வரவு வைக்க, பவள விழா (platinum jubilee) கொண்டாடும் முதலாவது பிரித்தானிய மா அரசி என வரலாறும் அவரோடு உறவு கொள்கின்றது.

சாண்ட்ரிங்ஹாம் கோட்டை மற்றும் பால்மோரலின் மாளிகை போன்ற அரச இல்லங்கள் பொதுமக்க - ளின் வருகைக்காக திறக்கப்படுதல், செயின்ட் பால் கதீட்ரலில் ராணியின் ஆட்சிக்கான சிறப்பு ஆராதனை, நாடெங்கும் பெருவிருந்தாய் தெருவிருந்து, 1,400 க்கும் மேற்பட்ட வீரர்கள் - 200 குதிரைகள் - 400 இசைக்கலைஞர்கள் பங்கேற்கும் பாதுகாவலர்கள் முறைமாறும் மரபார்ந்த விசேட நிகழ்ச்சி என ஜூன் 2 வியாழன் முதல் ஜூன் 5 ஞாயிறு வரையிலான நீண்ட வார இறுதி நாட்கள் ஆரம்பித்து வைக்க கோலாகலம் காணத் தயாராகின்றது ஐக்கிய ராஜ்ஜியம் முழுவதிலும் எலிசபெத் மகாராணியின் பவள விழா.

இக்கொண்டாட்டங்களையொட்டி ஏற்றப்படும் தீப் பந்தங்கள் (beacons) ஊடுருவி ஒளியூட்ட முன்னெப்பொழுதும் இல்லாதவாறு பிரமாண்டமான வகையில் பல்வேறு நிகழ்வுகள் ஆண்டு முழுவதும் நடைபெறும் என எதிர்வு கூறப்படுகின்றது.

ராணி தனது உடல்நிலை மற்றும் வயது முதிர்வு காரணமாக தேர்ந்தெடுக்கப்பட்ட நிகழ்வுகளில் மட்டுமே கலந்து கொள்வார் என்றாலும், அரச குடும்பத்தின் மற்ற உறுப்பினர்கள் உலகம் முழுவதும் பயணம் செய்து, மைல்கல்லின் பல்வேறு பொது நினைவு நிகழ்வுகளில் பங்கேற்பர்.

கனடாவும் முடியாட்சிக்குட்பட்ட நாடு என்ற வகையில் மாட்சிமை தங்கிய மகாராணியின் பவள விழாக் கொண்டாட்டங்களை விமரிசையாக்குவதற் - கான முனைப்புகளை மாகாண ரீதியாக முன்னெடுத்துள்ளது. ஒவ்வொரு கோடை காலத்திலும் பாராளுமன்ற திடலில் ஒலி ஒளி நிகழ்ச்சியாக நடைபெறும் வட விளக்கு விசேட கவர்ச்சி காட்டி மிளிரும். நாடு முழுவதும் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட அரச அலுவலகங்கள் மின் அலங்காரங்களில் ஒளிரும். வருடம் பூராவும் சீரொளியின் (Laser) ஒளியலைகள் ஆங்காங்கே வர்ண ஜாலமிடும்.

உலகெங்கும் வெளியிடப்படும் முத்திரைகள், பதக்கங்கள், ஓவியங்கள் திரும்பித் திரும்பிப் பார்க்க வைக்கும். 53 பொதுநலவாய நாடுகளையும் எதிர்பாராத விழாக்கள் பல மெருகூட்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கனடாவிற்கான முதலாவது முடி சூடிய அரசியான இவர் 1957ம் ஆண்டு அக்டோபர் மாதம் 14ம் திகதி ஆரம்பமான கனடா பாராளுமன்ற கூட்டத் தொடரில் நேரடியாக சமுகமளித்து சிம்மாசன உரை வழங்கியிருந்தார்.

53 தடவைகளுக்கும் மேலாக கனடாவிற்கு மட்டும் உத்தியோகபூர்வமாக பயணித்துள்ள இவர் ஒட்டு மொத்தமாக 120 நாடுகளுக்கு விஜயம் செய்துள்ளார்.

ஐக்கிய ராஜ்ஜியத்திலுள்ள பெரும் பணக்காரர்கள் 1000 பேரில் 372வது இடத்திலுள்ள இவரின் இன்றைய சொத்து மதிப்பு 365 மில்லியன் பவுண்ட்ஸ் ஆகும். 6.6 பில்லியன் ஏக்கர் நிலம் இவரது பெயரில் உள்ளது.

86.7 மில்லியன் பவுண்ட்ஸ் இறையாண்மை மானியமாக (சம்பளமாக) வருடத்துக்கு ஒரு முறை பிரித்தானிய அரசிடமிருந்து பெற்றுக்கொள்ளும் இவர் அதற்கான வருமான வரி செலுத்தத் தேவையில்லை. எனினும் 1992ம் ஆண்டு முதல் தானாகவே முன்வந்து தனது தனிப்பட்ட வருமானத்திற்கு சமனான வரியை வருடந்தோறும் செலுத்தியும் வருகின்றார்.



பிரித்தானிய நாடாளுமன்றத்திற்குத் தேர்தல் மூலம் தெரிவான புதிய பிரதமரின் நியமன கோரிக்கையை அனுமதிப்பது, அல்லது பதவியிலுள்ள பிரதமரின் ராஜினாமாவை ஏற்பது, ஒவ்வொரு புதிய அமர்வையும் சிம்மாசன பிரசங்கத்துடன் ஆரம்பித்து வைப்பது, இரு சபைகளாலும் நிறைவேற்றப்பட்ட மசோதாவிற்கு சட்டபூர்வமாக அரச அங்கீகாரம் வழங்குவது, அல்லது தடுப்பாணை (veto) மூலம் நிராகரிப்பது, பரிசீலனைக்கு வரும் விசாரணைகளுக்கும் உத்தரவுகளுக்கும் பிரகடனங்களுக்கும் கோமறை மன்றத்தின் (Privy Council) தலைவியாக ஒப்புதல் அளித்து நடைமுறைப் - படுத்துவது போன்றன இவரது பிரதம பணிகளாகும். தேவைவரின் போர்ப் பிரகடனம் செய்வதும் இவரது கடமை.

முடிக்குரிய ராணியான பின்னர், வின்சன்ட் சேர்ச்சில் முதல் போரிஸ் ஜோன்ஸன் வரை, 14 பிரதமர்கள் ஐக்கிய ராஜ்ஜியத்தில் பதவி வகித்துள்ளனர்.

பிரித்தானிய அரச பரம்பரையில் அரசரை மணம் புரிபவர் ராணி என அழைக்கப்பட் - டாலும் அரசியை மணம் புரிந்தவர் அரசன் என அழைக்கப்படுவதில்லை. சிம்மாசனத்தை வாரிசாகப் பெறுபவர் மட்டுமே அரசர் என அழைக்கப்படுவர். தந்தையின் அல்லது கணவனின் பெயரை தமது பெயருடன் சேர்த்துக் கொள்ளாது வம்சத்தின் பெயரை இணைப்பதே அரசியரின் மரபு.

ஏலவே 1558 முதல் 1603 வரை ஆட்சி செய்தவர் எலிசபெத் 1 என்று குறிப்பிடப்படு - கின்றார். அதனால் சம்பிராதாய பூர்வமாக இவர் எலிசபெத் 2 என்று அழைக்கப்படுகின்றார். இவரது பூட்டி அலெக்ஸாண்ட்ரா. பாட்டி மேரி. தாய் எலிசபெத். மூவரின் பெயர்களைச் சேர்த்து எலிசபெத் அலெக்ஸாண்ட்ரா மேரி என பெயர் பெற்றார். வின்ஸர் என்பது வம்சப்பெயர். லில்லிபெத் என்பது இவரது செல்லப் பெயர்.

எலிசபெத் என்றால் ‘கடவுளே என் சத்தியம்’ என்பது ஹீப்ரூ மொழியில் அர்த்தமாகும். ‘சத்தியமே கடவுள்’ எனப் பொருள் கொள்வோருமுளர்.

பாடசாலை எதற்குமே செல்லாத இவர் அரசியலமைப்பு, வரலாறு, சட்டம், கணிதம், பிரெஞ்ச் மொழி போன்றவற்றை பிரத்தியேக விரிவுரையாளர்கள் மூலம்

(30ம் பக்கம் வருக)



பிரேம் சிவகுரு

# நீட்சி காணும் நிலையற்ற காலம்

## ‘எல்லை கடந்த உலா’

நாம் வாழும் பூமிப்பந்தில் பல தட்டுகளின் அசைவு இயக்கம் இருப்பதை அனைவரும் அறிவர். இது ஆங்கிலத்தில் ரெக்ரோனிக் ஷிப்ட் (Tectonic shift) எனப்படும். இந்தத் தட்டுகளின் அசைவியத்தில் எப்போதாவது ஒன்றுடன் ஒன்று உராய்ந்து கொண்டால், பூமியின் எங்கோ ஓரிடத்தில் பூமி அதிர்ச்சி ஏற்பட்டதான உடனடி செய்தி கிட்டிக்கொள்ளக்கூடும்.

என்ன இது, இந்த முறை எல்லை கடந்த உலா புவியியல் பாடம் எடுக்க வருகிறதோ என நீங்கள் எண்ணக்கூடும். நிச்சயமாக இது புவியியல் பாடம் அல்ல! ஆனால் உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்புப் போர் இரண்டு மாதங்களைக் கடந்துவிட்ட நிலையில், இந்த இரண்டு மாத கால நகர்வுகள் எல்லாம் ஐரோப்பாவின் அரசியல் வரலாற்றில் நிச்சயமாக ஒரு Tectonic shift எனப்படும் ரெக்ரோனிக் மாற்றத்தை உருவாக்கியுள்ளது.

இந்த மாற்றம், கெட்ட காலத்திலும் ஒரு நல்ல காரியமாக, தமக்குள் பிடுங்குப்படும் ஐரோப்பியத் தலைவர்களை ஏதோ ஒரு வழியில் ஒன்றுபடுத்தியுள்ளது. அதிலும் இந்த போர்க்கால மூடுபனி நிலைமை சில ஐரோப்பியத் தலைவர்களுக்கு அவர்களின் உள்ளூர் நிலைவரங்களை திசைதிருப்பவும் நன்றாகவே உதவிக்கொண்டது. இதில் குறிப்பிடத்தக்கவர் பிரித்தானிய பிரதமர் போரிஸ் ஜோன்சன்.

உக்ரைனைக் காக்கவும் புட்டினை வீழ்த்தவும் பிரித்தானியர்களின் பாதுகாப்புக் கவசமான ஸ்டோர்மர் ஏவுகணை செலுத்திகள், ஸ்டார்ஸ்ட்ரீக் விமான எதிர்ப்பு ஏவுகணைகள் எல்லாற்றையும் அள்ளி வழங்கும் ஹீரோவாக அவர் மாறிவிட்டார். ஆனால் உள்நாட்டில், ‘படித்தவனே பாட்டைக் கெடுத்தான் - எழுதியவனே ஏட்டைக் கிழித்தான்’ என தனது அரசாங்கமே உருவாக்கிய கொரோனா முடக்க நிலை சட்டவிதிகளை தானே மீறிய தலைவராக மாறிவிட்டார்.

முடக்கநிலை சட்டம் காரணமாக தமது அன்புக்குரிய உறவினர்களின் மரண சடங்குகளில்கூட சாமானியர்கள் பங்கெடுக்க முடியாத நிலையில் - அதேகாலத்தில் தனது பிறந்தநாளுக்காக சட்டவிதிகளை மீறி விருந்து கொண்டாடியமைக்காக காவற்துறையினரால் அபராதம் விதிக்கப்பட்ட தலைவராகிவிட்டார் போரிஸ் ஜோன்சன்.

பார்ட்டிகேற் (Partygate) என்ற வர்ணிப்பைப் பெற்ற இந்த முறைகேட்டுக்காக, நாடாளுமன்றத்தில் அவர் மன்னிப்புக் கோரியிருந்தாலும் இந்த பதிவு எழுதப்படும்வேளை அவர் தனது இந்தியப் பயணத்தில் நின்றபோது, இந்த விடயம் வெஸ்ற்மினிஸ்டரில் சுழன்றடித்து அவர் மீதான மேலதிக விசாரணைக்கான ஒப்புதலையும் பெற்றுவிட்டது.

ஆகமொத்தம், உள்ளூரில் போரிஸ் ஜோன்சன் இந்த விடயத்தில் சீரோவாகி விட்டாலும், ஐரோப்பாவில் ரஷ்யாவின் முதலாவது வில்லனாக - பிரித்தானியாவின் பிரதமர் உக்ரைனியர்களுக்கு இப்போது ஹீரோதான். இதனால்தான் ஏப்ரல் மாத நடுப்பகுதியில் இவர் உட்பட பிரித்தானிய அமைச்சரவையின் முக்கிய முகங்களான 20 அரசியல்வாதி - களுக்கு ரஷ்யா தடைவிதித்துள்ளது

ஆனால் ரஷ்யாவுக்கு ஒரு வில்லனாக போரிஸ் ஜோன்சன் இருந்தாலும், உக்ரைனியர்களை பொறுத்தவரை போர்க்காலத்தில் தமது தலைநகர் கியேவில் நடமாடிய அவர் இன்னமும் சுப்பர் ஹீரோதான் .

ஏனைய மேற்குலக நாடுகளை விட உக்ரைன் விடயத்தில் அமெரிக்காவும் பிரித்தானியாவும் மிகக் கடுமையாக நிற்பதற்கு தனித்துவமான காரணங்கள் ஏதும் இருக்கக்கூடுமா? நிச்சயமாகவே உண்டு. ஏனெனில், சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் உக்ரைனிலிருந்த அணு ஆயுத களஞ்சியத்தை அது மீண்டும் ரஷ்யாவுக்கு கையளித்த பின்னர், 1994ல் புடாபெஸ்டில் ஒரு சர்வதேச புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உறுதியளித்த நாடுகளாக அமெரிக்காவும் பிரித்தானியாவுமே இருந்தன.

என்றோ ஒரு நாள் உக்ரைனின் சுதந்திரம் மற்றும் இறையாண்மை ஆகியன பலியாகும் நிலை வந்தால் அதனைத் தடுக்க உதவி செய்வதாகவும், அதன் எல்லைகளுக்கு மதிப்பளிப்பதாகவும் உறுதியளிக்கும் ஒரு குறிப்பாணையில் (மெமொரன்டம்) ஒப்பமிட்டதன் ஊடாக உக்ரெய்னின் பிராந்திய ஒருமைப்பாட்டைப் பாதுகாக்க தனக்கும் அமெரிக்காவுக்கும் சட்டப்பூர்வ கடமை உள்ளதாக பிரித்தானியா கூறுகிறது.

இதனால்தான் ரஷ்யக் கரடியுடன் மோதிவரும் உக்ரைனிய முள்ளம்பன்றி தனது முட்களை சிலிர்த்துக் காட்டினாலும், அமெரிக்கா மற்றும் பிரித்தானியாவின் ராணுவ பிராணவாயு இல்லாமல் அதற்கு சிலிர்ப்பு கிடையாது.

நிலப்பரப்பு எனப் பார்த்தால் ரஷ்யா பிரித்தானியாவை விட 70 மடங்கு பெரிய நாடாக இருந்தாலும் பிரித்தானியாவின் ராணுவ உதவிகளின் தாக்கத்தின் கதைகளை ரஷ்யா அறியும். பிரித்தானியர்கள் வழங்கிய ஜவலின் ஏவுகணைகள் களமுனையில் தமக்கு நல்ல பலனை வழங்கியதாக உக்ரைனியர் கூறும் நிலையில், இப்போது இன்னும் வலுக்கூடிய ஸ்டோர்மர் ஏவுகணை செலுத்திகளையும் ஸ்டார்ஸ்ட்ரீக் விமான எதிர்ப்பு ஏவுகணைகளையும் அது வழங்கியுள்ளது.

நிச்சயமாக போரிஸ் ஜோன்சனின் இந்த நகர்வு ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டினை மேலும் சீற்றப்படுத்தும். ஏனெனில் பிரித்தானியர்கள் வழங்கிய ஸ்டார்ஸ்ட்ரீக் வான் எதிர்ப்பு ஏவுகணைகளால் தனது விமானங்கள் நடுவானில் தீப்பிழம்பாக மாறுவதை புட்டின் விரும்பமாட்டார். ஒருவேளை அவ்வாறு நடந்தால் உக்ரைன் இன்னும் துவம்சமாகும்.

மொத்தத்தில், விளாடிமிர் புட்டினின் இந்தப் படையெடுப்பு ஐரோப்பாவின் அரசியல் வரலாற்றில் நிச்சயமாக ஒரு ரெக்ரோனிக் மாற்றத்தை உருவாக்கினாலும், புட்டினின் போர் இயந்திரம் இரத்தக்களரியுடன் பெரும்பான்மை மக்கள் ரஷ்ய மொழி பேசும் டொன்பாஸைக் கட்டுப்படுத்தினாலும், ஆபத்தும் நிலையற்ற காலமும் நீட்சியடைந்தே செல்லும்.

# சங்கத்தமிழர் திருமணச் சடங்கு



முனைவர் பால. சிவகடாட்சம்

## படித்ததும் கேட்டதும் 50

மாங்கல்யம் தந்துனானேன மம ஜீவன ஹெதுன:
காந்தெ பத்னாமி சுபகே த்வம் ஜீவ சரட சதம்

"இது ஒரு புனித நூல். இது என் நீண்ட ஆயுளுக்கு இன்றியமையாதது. இதை நான் உனது கழுத்தில் கட்டுகிறேன், பல மங்களகரமான பண்புகளைக் கொண்ட கன்னிப் பெண்ணே, நீ நூறு ஆண்டுகள் மகிழ்ச்சியாக வாழ்வாய்" என்று மாப்பிள்ளை சார்பாக அய்யர் சமஸ்கிருத மொழியில் மணமகளுக்கு சொல்லிக் கொண்டிருக்க, மாப்பிள்ளை தாலிக்கயிற்றை எடுத்து மணமகளின் கழுத்தில் கட்டி, அம்மி மிதித்து, அருந்ததி காட்டி, கல்யாண முருக்க மரத்தையும் ஓமகுண்டத்தையும் சுற்றி வலம்வந்து செய்யும் திருமணச் சடங்கு சங்ககாலத் தமிழர் மத்தியில் இருக்கவில்லை.

இருப்பினும், பண்டைய தமிழர்கள், இன்று அவர்களின் சந்ததிகளைப் போலவே, திருமண விழாவை நடத்த ஒரு நல்ல நாளைத் தேர்ந்தெடுத்தனர். வளர்பிறையில் ரோகிணி நட்சத்திரமும் சந்திரனும் கூடும் நாள் திருமணத்துக்குச் சிறப்பான நாள் என்று கருதினார்கள். முற்றத்தில் மணல் பரப்பிப் பந்தல்போட்டு மாலைகள் தூக்கி, குத்துவிளக்கு ஏற்றி, கடவுளை வணங்கி, மணமகள் தலையில் அறுகரிசி தூவி வாழ்த்தும் நிகழ்வுகள் அன்றும் இருந்தன. திருமண நாளின் போது மணமகள் தாலி அணியும் வழக்கமும் இருந்திருக்கலாம் என்பதை சங்ககாலக் கவிதைகள் மூலம் ஊகிக்க முடியும். இழை என்பது கயிற்றையும் குறிக்கும் ஆபரணத்தையும் குறிக்கும். "இழை அணிச் சிறப்பு" என்பதற்குத் 'தாலிக்கயிறு அணியும் சிறப்பு' என்று பொருள்காணமுடியும். (அகநாநூறு 136)

தலையில் குடம் சுமந்த உரிமைப்பெண்கள் மணப்பெண்ணின் முன்னும் பின்னும் முறைப்படி நின்று சீர் செய்ய, கூடியிருந்தோர் குரவை ஒலி எழுப்ப, மங்கலமேளம் முழங்க, திருமணமாகிப் பிள்ளைகள் பெற்ற சுமங்கலிகள் நால்வர் மணமகளின் தலை மேல் ஈரிதழ்ப்பூவும் அரிசியும் தூவி "ஒழுக்கநெறி தவறாது பெற்றோருக்கு உதவியாக கணவனுக்கு உற்றதொரு துணையாக ஆகுவாய்" என்று வாழ்த்தி சடங்கை நிறைவேற்றுவர். தொடர்ந்து திருமணத்துக்கு வந்திருந்தோர் வாழ்த்தியபின்னர் மணப்பெண்ணைத் தனி ஒரு இல்லத்தில் காத்திருக்கும் கணவனிடம் அனுப்பிவைப்பர்.

"உழுந்துதலைப் பெய்த கொழுந்கனி மிதவை
பெருஞ்சோற் றமலை நிற்ப நிரைகால்
தண்பெரும் பந்தர்த் தருமணல் ஞெமரி
மனைவிளக் குறுத்து மாலை தொடரிக்
கனையிருள் அகன்று கவின் பெறு காலைக்
கோள்கால் நீங்கிய கொடுவெண் திங்கள்
கேடில் விழப்புகழ் நாடலை வந்தென
வுச்சிக் குடத்தர் புத்தகல் மண்டையர்
பொதுசெய் கம்பலை முதுசெம் பெண்டிர்
முன்னவும் பின்னவும் முறைமுறை தரத்தரப்
புதல்வற் பயந்த திதலையவ் வயிற்று
வாலிழை மகளிர் நால்வர் கூடிக்
'கற்பினின் வாழாஅ நற்பல வுதவிப்
பெற்றோற் பெட்கும் பிணையை ஆகென'
நீரொடு சொரிந்த ஈரிதழ் அலரி
பல்லிருங் கதுப்பின் நெல்லொடு தயங்க
வதுவை நன்மணம் கழிந்த பின்றைக்
கல்லென் சும்மையர் ஞெரேரெனப் புகுதந்து
'பேரில் கிழத்தி யாகென' தமர் தர" நல்லாவூர் கிழார்

\- அகநாநூறு பாடல் 86

திருமணவீட்டில் விருந்தாளிகளுக்குக் கல்யாணச் சாப்பாடு போடும் வழக்கம் எல்லாச் சமூகங்கள் மத்தியிலும் எக்காலத்திலும் உண்டு. சங்ககாலத்தில் உழுந்து சேர்த்துச் சமைத்த சோறு சைவர்களுக்கு என்றால் ஆட்டிறைச்சியும் நெய்யும் சேர்த்து அவித்த வெண்சோறு அசைவர்களுக்குப் பரிமாறப்பட்டதாம்.

### Wedding ceremony in the *Sangam* era

The wedding ceremony in which the groom takes a yellow thread (Thali) and ties it around the bride's neck while the officiating priest, on behalf of the groom, addressing the bride in Sanskrit, was unknown to the Tamils of *Sangam* era.

"*Mangalyam thantuṉa ṉena mamajeevaṉa hetuṉa*
*Kante badhṉami shubage thwam jeeva sarada satam*",
(It is a sacred thread. This is essential for my longevity.
I tie this around your neck. May you live for hundred years)

The ceremonial practices such as the bride stepping on a granite stone, viewing the star Arundhati and walking around the Indian coral tree planted on the wedding platform while holding the bridegroom's hand were also not seen among the *Sangam* Tamils. However, ancient Tamils, like their descendants today, selected an auspicious day to conduct the wedding ceremony and believed that the day when the Rohini star and moon meet is the best for the occasion.

There were also events in the day when sand was spread in the court-yard, garlands were hung, lamps were lit, God was worshiped, and the bride was sprinkled with flowers and rice on her head. One can infer from contemporary poems that it may have been also customary for the bride to wear a thali during the wedding day (**AkananuRu 136).**

"*The women carrying pots on their heads stand behind and front of the bride in orderly manner to present the gifts. In the middle of cheering crowd and the sound of ceremonial drums four young ladies who are married and having children sprinkle flowers and rice grains on bride's head while wishing her to be a support for her parents and a chaste house wife to her husband. The noisy guests cheer when the bride being sent to her husband waiting in the newly constructed house.*" **AkananuRu 86**

It is customary in all communities and at all times to serve special meals to guests at the wedding. During the *Sangakm* period, rice cooked with black gram was served for vegetarians while nonvegetarians were served with rice cooked with mutton and ghee.

# ஆகாயத்தில் நடந்த அபூர்வ மனிதன்



ப. ஸ்ரீஸ்கந்தன்

## ஞாபகம் துளிர்க்கிறதே ! 13

வீட்டுக் கூரையிலுள்ள பீலியிலிருந்து கஞ்சல்களை எடுப்பதற்குச் சிறிய ஏணியின் மேற்தட்டில் நிற்கும்போது எனக்குக் கால்கள் உதறுகிறது. சி.என். டவரின் உச்சியில் நின்று கீழே பார்க்க, முழங்கால் கூசி வயிறு குமட்டல் எடுக்கிறது. இருந்தபோதும் மற்றவர்கள் நிகழ்த்தும் சாகசங்களையும் சாதனைகளையும் பார்ப்பதில் எனக்கு அலாதிப் பிரியம்.

பாடசாலை நாட்களில் எங்களின் சென்.ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெற்ற களியாட்ட விழாவில் பாதாளக் கிணற்றில் பயங்கரக் காரோட்டம் என்ற சாகச நிகழ்ச்சி இடம்பெற்றது. கூம்பு வடிவில் பலகைகளாலான கிணற்றுள் கார் ஒன்று படுவேகமாக சுற்றிச் சுற்றி மேல் விளிம்புவரை வந்து போனது. சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் நிகழ்ந்த களியாட்ட விழாவில் கம்பிகளாலான பூலோகத்தினுள் இரு மோட்டார் சைக்கிள்கள் குறுக்கும் நெடுக்குமாக ஒரே நேரத்தில் மின்னல் வேகத்தில் சுற்றி வந்தன. மயிர்க்கூச்செறியும் சாகசங்கள் அவை.



எழுபதுகளில் கின்னஸ் சாதனை திருவிழாக்கள் எமது மண்ணில் பல நடந்தேறின. ஆழிக்குமரன் ஆனந்தன் 1971ல் பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து கின்னஸ் சாதனையை எம்மவர் மத்தியில் தொடக்கி வைத்தார். இந்தியாவரை சென்று திரும்பிவர அவர் எடுத்துக் கொண்ட நேரம் 51 மணித்தியாலங்கள். இது தவிர ஒற்றைக் காலில் நின்றது, தொடர் நடனம், பந்து அடித்தல், தண்ணீரில் மிதத்தல் என பல கின்னஸ் சாதனைகளை அவர் நிகழ்த்தினார். 1984ல் ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடக்கும் சாதனை முயற்சியின்போது ஆழிக்குமரன் மரணத்தைத் தழுவினார்.

நசீர் என்ற சாதனையாளன் யாழ்ப்பாணம் பொம்மை வெளியில் விசப்பாம்புகள் நிறைந்த கண்ணாடிப் பேழையுள் பல மணி நேரம் இருந்து கின்னஸ் சாதனை ஒன்றை முறியடித்தார்.

இலங்கையிலும் இந்தியாவிலும் நடத்தல், ஒற்றைக் காலில் நிற்றல், தொடர் இசைக்கருவி வாசித்தல் போன்ற சாதனை முயற்சிகளில் வெற்றி பெற்ற சுரேஸ் ஜோக்கிம், கனடாவில் பல கின்னஸ் சாதனைகளை நிகழ்த்தினார். நீண்ட நேர ஒலிபரப்பு, தவளைப் பாய்ச்சல், நீண்ட தூரம் காரைத் தள்ளியது, தொடர் நடனம் போன்றவை இவரது மற்றைய சாதனைகளில் சில.

முன்னர் குறிப்பிட்ட களியாட்ட விழாக்களில் இடம்பெற்ற சர்க்கஸ் நிகழ்ச்சி முக்கியமானது. உயரத்தில் கட்டப்பட்ட கம்பி ஒன்றின் மீது தமது தொப்பிகளை எறிந்து பிடித்து விளையாடிய இன்னொருவர் கம்பி மீது சைக்கிளும் ஓட்டினார். இதயம் பயத்தில் பக்பக் என்று அடித்தது. இந்தியாவில் சிலர் தங்கள் சிறுபிள்ளைகளை கம்பி மீது நடக்கவிட்டு பிழைப்பு நடத்தினர்.

மேற்குலக நாடுகளில் கம்பியில் நடக்கும் சாகசங்கள் மிகவும் சாதாரணமாக நிகழ்ந்தன. பிலிம்பே என்ற பிரெஞ்சுக்காரர் நியுயோர்க்கின் உலக வர்த்தக மைய இரட்டைக் கோபுரங்களின் உச்சியை இணைத்த கம்பி மீது நடந்து சாகசம் செய்தார். கினடார் என்ற அமெரிக்கரும் பஸ்குவட் என்ற பிரெஞ்சுக்காரரும் ஒன்றாகக் கம்பியில் நடந்து லண்டன் தேம்ஸ் நதியைக் கடந்தனர். பாங்க் என்ற பிரித்தானியர் உயரக் கம்பி மீது நின்றவாறு பீட்டில்ஸ் குழுவினரின் பாடல்களுக்கு நடனமாடினர்.

நயகரா நீழ்வீழ்ச்சியின் குறுக்காக கம்பி கட்டி அதன் மீதும் நடந்து பலர் சாகசம் நிகழ்த்தியுள்ளனர். ஸ்டீபன் பியர் என்பவர் இவ்வாறு பல தடவைகள் நடந்து சாதனை புரிந்த போதிலும் 1987ல் நீழ்வீழ்ச்சியினுள் விழுந்து மரணத்தைத் தழுவினார். 1860ல் வில்லியம் ஹன்ற் என்பவர் தமது நண்பரை முதுகில் சுமந்தபடி கம்பியில் நடந்து சென்றார். 1876ல் மரியா ஸ்பெல்டரினி என்ற பெண் தன் கண்களைக் கட்டிய நிலையில் நீர்வீழ்ச்சியை கம்பியில் நடந்து போனார்.

நயாகரா வீழ்ச்சியில் நீர் விழுந்து ஓடுகிற பகுதிகளின் குறுக்காகவே இவர்கள் சாதனை செய்தனர். ஆனால், 2012ல் நிக் வலன்டா என்பவர் நீர் கொட்டும் இடத்தின் குறுக்காக கம்பியில் நடந்து சென்று அசுர சாதனையை படைத்தார். ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் பார்த்த இந்தச் சாதனையை நானும் நேரடியாகப் பார்த்தேன்.

வலன்டா என்ற சாகசப் பரம்பரையின் ஏழாவது தலைமுறையைச் சேர்ந்தவர் நிக். நீர்வீழ்ச்சியின் நேர் மேலே நடப்பதில் பல சிக்கல்களை இவர் எதிர்நோக்கினார். கம்பி நனைந்து வழுக்கும் தன்மை ஏற்பட்டது, நீர்ப் புகார் காரணமாக முன்னேயுள்ள கம்பியும் பகுதிகளும் தெரியாமல் போனமை, அமுக்கக் காற்றின் தாக்கம் எனப் பல தடைகளைத் தாண்டியே வெற்றிகொண்டு சாதனை செய்தார். தவிர்க்க முடியாத காரணங்களால் தம்மையும் கம்பியையும் இணைக்கும் பாதுகாப்புப் பட்டியை அணிந்தவாறே இச்சாதனையை அவர் நிகழ்த்த வேண்டியிருந்தது.

அமெரிக்கப் பகுதியில் நின்றவர்களுக்கு கையை அசைத்துவிட்டு கம்பியில் நடக்கத் தொடங்கினார். நீர்வீழ்ச்சியின் நடுப்பகுதியில் நின்றபோது தொலைக்காட்சி வர்ணனையாளர் கேட்ட கேள்விகளுக்கு பதில் சொன்னார். “இந்த அழகான இடத்தில் நிற்கும் முதல் மனிதனாக நான் இருப்பது பெருமை” என்றார். முடியும் தறுவாயில் கம்பியில் முழங்காலில் இருந்து வணக்கம் போட்டார். பின்னர் மீதித் தூரத்தை கம்பி மீது ஓடிக் கடந்தார்.

சாதனையை முடித்த நிக் இறுதியில் குடிவரவு அதிகாரிகளுடன் கலகலப்பாக கதைத்துக் கொண்டிருந்தார். சாதனையைப் பார்த்த எனக்கு சரியான களைப்பாக இருந்தது.

சாதனைகளையும் சாகசங்களையும் நேரில் பார்ப்பது எப்போதும் திரில்லான அனுபவம்தான்.

# 69 லட்சம் வெற்றி வாக்குகளுக்கான ‘மரியாதை’

## 2021ல் ஸ்கொட்லாந்தில்





## 2022ல் கொழும்பில்




69 லட்சம் சிங்கள மக்களின் வாக்குகளால் ஜனாதிபதியாக தாம் தெரிவானதாகக் கூறி மகிழும் கோதபாய ராஜபக்சவை, அவரது பதவியில் அரைவாசிக் காலம் முடிவதற்கு முன்னரே ‘கோதா போ வீட்டுக்கு’ என்னும் கோரிக்கையை அந்த மக்களே முன்வைத்து போராடி வருகின்றனர். தமிழ் மக்களைப் பொறுத்தளவில் இவர் ஒரு இனப்படுகொலைகாரர். சிங்கள மக்களைப் பொறுத்தளவில் இவர் ஜனாதிபதி பதவிக்கு லாயக்கற்றவர், நாட்டை அழித்துக் கொண்டிருப்பவர். 2021ல் கோதபாய ஸ்கொட்லாந்துக்குச் சென்றபோது அங்கு வாழும் தமிழர் அவரை இனப்படுகொலையாளராக எழுத்து வடிவில் ஒளியூட்டி மூலம் பகிரங்க இடங்களில் காண்பித்தனர். இப்போது கொழும்பிலுள்ள அவரது செயலகத்தின் மீது ‘கோதா கோ ஹோம்’ என அவரது மக்கள் ஒளியூட்டி பகிரங்கமாக காட்சிப்படுத்துகின்றனர்.●

# ‘ஈழத்து மாட்டு வண்டிச் சவாரியும் தமிழர் மரபும்’ ஆஸ்திரேலியாவில் இடம்பெற்ற ஆவண நூல் வெளியீடு








ஈழத்தில் மாட்டு வண்டிச் சவாரியும் தமிழர் மரபும் என்ற நூல் கடந்த மாதம் மூன்றாம் திகதி ஆஸ்திரேலியாவின் சிட்னியிலுள்ள முருகன் கோவில் கலாசார மண்டபத்தில் வெளியிடப்பெற்றது. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், சுன்னாகத்தில் நாற்பது ஆண்டுகள் மருத்துவப் பணியாற்றியவருமான ப. விக்கினேஸ்வராவின் 31ம் நாள் நினைவு வணக்க நிகழ்வில் வெளியிடப்பட்ட இந்நூல், கிழக்கிழங்கை பல்கலைக்கழக தமிழ்த்துறையின் முன்னாள் பேராசிரியர் பாலசுகுமாரினால் எழுதப்பட்டது.

ஈழத்தமிழர் மரபுரிமைகள் பற்றியதான சிந்தனையும் செயற்பாடுகளும் அண்மைக்காலமாக அதிகரித்துள்ள சூழ்நிலையில், கல்வியாளர்களும் வரலாற்று ஆய்வாளர்களும் மாட்டு வண்டிச் சவாரி, ஏறு தழுவுதல் போன்ற பாரம்பரிய விடயங்களில் அக்கறை செலுத்துவதை காணக்கூடியதாக உள்ளதென இந்நிகழ்வில் உரையாற்றிய திரு. தனபாலசிங்கம் கூறினார்.

தமிழர்களின் பாரம்பரிய கலாசாரத்தையும், ஈழத்தின் பண்பாட்டு விழுமியங்களையும் பிரதிபலிக்கும் இந்நூலை ஐங்கரன் விக்கினேஸ்வரா வெளியிட்டு உரையாற்றுகையில், ஈழத்தமிழரின் கலாசார மரபில் மாட்டு வண்டிச் சவாரி முக்கிய இடம்பெற்றுள்ளமையை அண்மைக்கால நிகழ்வுகள் ஊடாக அறிய முடிகிறது என குறிப்பிட்டார். இந்நூலினை ராஜன் விக்கினேஸ்வரா வெளியிட்டு வைக்க முதற்பிரதியை சிட்னியில் வாழும் பிரபல டாக்டர் மனோமோகன் பெற்றுக்கொண்டார்.●





## ‘மிஸ்டர் தமிழ் கனடா’வின் சர்வதேச மகளிர் தினம்

# ‘மாதரே சிறகை விரி’







கனடாவில் இயங்கும் ‘மிஸ்டர் தமிழ் கனடா’ (MR. Tamil Canada) நடத்திய சர்வதேச மகளிர் தின நிகழ்வு ‘மாதரே சிறகை விரி’ என்ற மகுடத்தில் மார்க்கம் ஹில்ரன் மன்றில் கடந்த மார்ச் மாதம் இடம்பெற்றது. மகளிர் மட்டும் பங்கேற்ற கலைநிகழ்ச்சிகளை அடுத்து மகளிர் பங்குபற்றிய காத்திரமான கருத்துப் பகிர்வொன்று இடம்பெற்றது. முன்மாதிரியான வகையில் சமூகத்தில் செயற்படும் தொழிற்துறை சார்ந்த ஐவர் இதில் பங்குபற்றினர். மருத்துவர் காஞ்சனா சிவலிங்கம், சட்டவாளர் லஷ்மி வாசன், மாற்றுப்பாலினத்தவர் ஏஞ்சல் கிளேடி, மருத்துவத்துறை பணியாளர் ஃபியோனா கிங்ஸ்லி, சமையல்துறை ஆலோசகர் ரஜனி நாதன் ஆகியோர் சமூகத்தில் தாங்கள் சந்தித்த சவால்கள், அவற்றிலிருந்து விடுபட்ட சாதனைகள் போன்றவைகளை கேள்வி-பதில் வடிவில் விபரித்து விளக்கி பலரது பாராட்டையும் பெற்றனர். ஜனனி பாஸ்கர் இந்நிகழ்வை வழிப்படுத்தினார். மிஸ்டர் தமிழ் கனடா அமைப்பின் தலைவர் ரவி கனகசபை இந்நிகழ்வின் முக்கியத்துவத்தை எடுத்துக்கூறினார். மேற்படி அமைப்பைச் சேர்ந்த சங்கர் முழு நிகழ்வையும் நெறிப்படுத்தினார். (ஒளிப்படங்கள் : கஜன்)




## உலகளாவிய குரல் தேடல் போட்டியில் கனடாவுக்குப் பெருமை சேர்த்த சுபீகா



இந்தியாவின் திரைப்பட முன்னணி இசைக் கலைஞர் சங்கர் மகாதேவன் அக்கடமியால் நடத்தப்பட்ட உலகளாவிய குரல் தேடல் போட்டியில் இரண்டாவது இடத்தைப் பெற்றதன் வாயிலாக செல்வி சுபீகா மனோகாந்தன் கனடாவுக்கு பெருமை சேர்த்துள்ளார். SMA AWAR (Senior) நிகழ்ச்சியின் இறுதிச் சுற்றில் அமெரிக்கா, இலங்கை, இந்தியா, ஜேர்மனி, கனடிய நாடுகளின் கலைஞர்கள் போட்டியிட்டனர்.

இறுதியாகத் தெரிவான ஆறு கலைஞர்கள் - இரண்டு வித்தியாசமான இசை வகை (Genres) பாடல்கள் கொண்ட இறுதிக்கட்ட போட்டியில் கலந்து கொண்டனர். இதன் நடுவராக சங்கர் மகாதேவனே அமைந்தார். உலகளாவிய ரீதியில் இடம்பெற்ற இப்போட்டியில் இரண்டாவது இடத்தைப் பெற்ற சுபீகா மனோகாந்தனுக்கு இருபத்தையாயிரம் இந்திய ரூபா பரிசாகக் கிடைத்துள்ளது. எம்.எஸ். விசுவநாதன் இசையில் வந்த ராகங்கள் பதினாறு என்ற பாடலையும், ஏ.ஆர். ரகுமானின் மேற்கத்திய இசைப்பாணியை தழுவிய அடியே அடியே என்ற பாடலையும் இறுதிச் சுற்றுக்கு சுபீகா பாடினார். இசைப்பாரம்பரியத்தின் மூன்றாம் தலைமுறையினரான சுபீகா, வோட்டர்லூ பல்கலைக்கழகத்தின் பொறியியல் கல்வி மாணவி. கனடாவின் முன்னணி இசை ஆசிரியையும் வீணை ஆசிரியையுமான சாருமதி மனோகாந்தனின் புதல்வி இவர். இவரே தமது மகளுக்கு குருவாகவும் அமைந்துள்ளார். தந்தையார் மனோகாந்தன் ஒரு பொறியியலாளர்.

## ஹாவர்ட் தமிழ் இருக்கைக்கு தலைமைப் பேராசிரியராக மார்த்தா ஆன் செல்பி



ஹாவர்ட் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள தமிழ் இருக்கைக்கு தலைமைப் பேராசிரியராக மார்த்தா ஆன் செல்பி நியமிக்கப்பட்டுள்ளார். உலகின் தலைசிறந்த பல்கலைக்கழகங்களில் ஒன்றான - 380 ஆண்டுகள் பழைமையும் பாரம்பரியச் சிறப்பும் கொண்ட இப்பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழிக்கு இருக்கை அமைக்கும் பணி 2019ம் ஆண்டில் இறுதி செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து தலைமைப் பேராசிரியரைத் தெரிவு செய்யும் பணியை பல்கலைக்கழகம் மேற்கொண்டு வந்தது. மார்த்தா ஆன் செல்பி இவ்வருடம் செப்டம்பர் முதலாம் திகதி தமது பதவியை ஏற்கவுள்ளார். சங்க இலக்கிய ஆய்வில் முனைவர் பட்டம் பெற்றுள்ள மார்த்தா ஆன் செல்பி, ஆஸ்ரின் நகரில் அமைந்துள்ள டெக்ஸாஸ் பல்கலைக்கழகத்தில் தெற்காசிய கல்வித்துறையில் இணைப் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். இந்திய இலக்கியம், இந்திய மருத்துவ முறை அறிமுகக் கல்வி, இந்து - பௌத்த மதக்கல்வி ஆகிய துறைகளில் இங்கு பயிற்றுவித்து வருகிறார்.

# ஆண்டுகள் எத்தனை ஆயினும்
# நினைவும் நீயே! நிழலும் நீயே!

தனயனாக
**05-05-1970**



தந்தைக்காக
**10-05-1989**

## செல்வன் எஸ். தி. அகிலன்

யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி மாணவர் தலைவன்
கல்லூரி கிரிக்கெட் அணித் தலைவன்; விளையாட்டு வீரன்

நினைவுநாள் ஒருநாளா இல்லை இல்லை
நினைப்பதற்கு மறந்ததொரு கணமும் இல்லை !
மனையருகில் மடிமீதில் படிக்கும் நூலில்
மகனேநீ தெரிகின்றாய் எதிலும் எங்கும் !
அனைவரதும் உறவுகளும் அகன்று போகும்
அமைதிமிகு இரவுகளில் அழகாய் வந்து
அருகமர்ந்து பேசுகிறாய் விடியும் மட்டும் !
தோன்றுகின்றாய் கண்களில் துன்பம் தீர
இணைபிரியா துணையான மகனே எங்கள்
இதயமதை ஆளுகின்ற அரசன் நீயே !
எந்நாளும் எவ்விடமும் என்றும் எம்முள்
நினைவாயும் நிழலாயும் வாழ்பவன் நீயே !

அம்மா, அப்பா
குடும்ப உறவினர்கள், நண்பர்கள்
416.920.9250

# Markham McNicoll Urgent Care Centre
## (MMUCC)

**எங்கள் புதிய மருத்துவ சேவைகள்!**

நோயாளர்கள் தங்கள் வீட்டிலிருந்தோ அல்லது அலுவலகத்திலிருந்தோ நேரலை வழியாக (Virtual Care) மருத்துவரிடம் சிகிச்சை பெறலாம்.

நோயாளர்கள் கணினி மூலமோ அல்லது தொலைபேசி மூலமோ (online booking & book by phone) மருத்துவர் பார்வையிடும் நேரத்தையும் காலத்தையும் பதிவு செய்யலாம்.

வைத்திய கலாநிதி சிந்துலா விஜயா (குடும்ப மருத்துவர்) அவர்களது பதிவு பெற்ற நோயாளர்களும் இந்த சேவைகளைப் பெறமுடியும்.

மேலதிக விபரங்களுக்கு

**medcentrehealth.com**

எனும் எங்கள் இணையத்தளத்தைப் பார்வையிடவும்.


MEDCENTRE HEALTH
SYNCHRONIZING HEALTH SECTORS

**2901 Markham Road, Unit -11**
**Toronto, ON M1X 0B6**

**Phone: 416-609-3333**

**Transition**

**CRITICAL ILLNESS INSURANCE**



## அபாயம் உண்மையாகலாம்.

**சிக்கல் நிறைந்த ஆபத்தான நோய்க்கு நீங்கள் ஆளாகும்போது தகுந்த நிதி உதவிகளைப் பெற்றுத் தர வைக்கும் தேவை எங்களுக்கு உண்டு என்பதை இங்கு காணுங்கள்.**

**புள்ளி விபரங்கள் சொல்வதென்ன?**

| In Canada | |
|---|---|
| Breast cancer | 1 woman in 8 |
| Prostate cancer | 1 man in 7 |
| Heart disease | 1 person in 4 |
| Stroke (CVA) | 1 person in 20 |

Fortunately, more people are surviving these afflictions and living longer lives.

| Survival rate | |
|---|---|
| Cancer[2] | 60% |
| Heart attack | 85% |
| Stroke | 80% |

Over $63 million has been paid in critical illness benefits to help people preserve their finances while they focus on making a healthy recovery.

- Average benefit paid : $56,000
- Average age of people diagnosed: 49 years

**Industry critical illness claim breakdown[3]**




**BENEFITS PAID BY GENDER**

Women 54%
Men 46%

iA Financial Group

# AJITH SABARATNAM

**647-401-5800 / 416-439-2800**

10 Thornmount Dr, Scarbrough, Ont, M1B 3J4.



Chapel Ridge

FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community

## OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை
உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.



### At Need Funeral Arrangements

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

*• Vistation • Funeral & Memorial Service*
*• Reception • Burial • Cremation*

மார்க்கம், மற்றும் மிசிசாகா
நகரங்களில் எமது சேவை





**Christeen Seevaratnam**
416-258-6759

**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826



இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

### *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**

- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**

- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1
www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

*A caring part of our community*



BUY - SELL - INVEST - LEASE

COMMERICAL & RESIDENTIAL & YOUR COTTAGE NEEDS!!!

★ Seniors Real Estate Specialist (SRES)
★ Certified Luxury HomeMarketing Specialist (CLHMS™)

SIVAGE SIVAGUMARAN
CPA, CGA, GUILD™, SRES, ABR, SRS, RSPS
BROKER

416.553.8902

sivagehomes@sivage.ca  www.sivage.ca

SRES

PLATINUM 2021

CLHMS GUILD

RATE-MY-AGENT 2021 ~ 3rd ~ Toronto Real Estate Agent Sivage Sivagumaran

RE/MAX
CROSSROADS REALTY INC., BROKERAGE
*Independently owned and operated.
312 - 305 Milner Ave. Toronto, ON. M1B 3V4



# JRB GROUP CORPORATION

Loans, Mortgages, Insurance, Visa,
Real Estate, Master Card, Credit Counselling

Best rate Mortgage Arranged

Almost All Services Available

Business Loans 25K to 500,00

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அல்லது ஆரம்பிக்கப்படவுள்ள
சகல வர்த்தகர்களுக்குமான சிறப்பான சேவை!



FINANCE

R. R. Rajkumar B. Com (Hons), MBA

647–289–6164 / 416–655–5577

NDP NPD
**ANDREA**
HORWATH

கடந்த சில ஆண்டுகளாக ஒன்டாரியோவில் நாம் பல சிரமங்களை அனுபவித்துள்ளோம்.

# ஆண்ட்ரியாவிடமும் அவரின் NDP கட்சியிடமும் உள்ள திட்டங்கள்:

- மருத்துவ சேவையை சரிசெய்வது
- முதியோர் பராமரிப்பினை சரிசெய்வது
- அதிகரிக்கும் நாளாந்த வாழ்க்கைச் செலவுகளை கட்டுப்படுத்துவது
- செலவுகளை சமாளிக்க கூடிய தொழில் வாய்ப்புகளை உறுதி செய்வது

## சீரழிந்ததை சரிசெய்து, உங்களின் முன்னேற்றத்துக்காக போராடும் நேரம் இது.



**Doly Begum**
Scarborough Southwest



**Veronica Javier**
Scarborough -Guildwood



**Justin Kong**
Scarborough North



**Felicia Samuel**
Scarborough -Rouge Park



**Neethan Shan**
Scarborough Centre



**STRONG. READY. WORKING FOR YOU.**

Authorized by the CFO for the Ontario NDP


நியூ
ரங்கனாஸ் நகைமாடம்
மார்க்கம் & ஸ்ரீல்ஸ்
Tel: 647-702-2159
சிங்கப்பூர் நகைகளை மிகக் குறைவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்
பழைய தங்க நகைகள் அதிகூடிய விலையில் வாங்கப்படும்.
தங்க நகை அடவு சேவை குறைந்த வட்டி வீதம்
தங்கமகள் சேமிப்பு திட்டத்தில்
இணையும் அனைவருக்கும் $1500
பெறுமதியன நகையை பொற்றுக்கொள்ளமுடியும்
6055 Steeles Ave E Unit C102, Scarborough, ON., M1X 0A7
Telephone: 647-702-2159 / 647-947-2864
NewRanganasJewellery
newranganasjewelhouse.com


Just Sold!
RAVE
THE REALTOR
Another SOLD
$ 206,000
Over Asking Price
18 Brackenridge St,
Ajax, Ontario
Rossland & Salem
- Contact us for a Free Home Evaluation! (no obligation)
- For personalized Tour & Other Property Information Call Us today!
- Free home staging
Before you list Call me
You can see the Difference
Highest price in the same street
P.Raveenthiran
Real Estate Broker
416-567-2462
realtor.rave@gmail.com
HomeLife/Future Realty Inc.,Brokerage
205-7 Eastvale Dr,Markham ON. L3S 4N8
Bus: 905.201.9977 | Fax: 905.201.9229
HOMELIFE
HIGHER STANDARDS

AGA
Beauty Skin SPA
&
Tranning Center

15, Karachi Drive, Unit 5, Markham
On L3S0B5

Body & Face
Cream
On Sale

Call : 647-716-5252

Defining Beauty with style



Beauty Services
* Threading
* Waxing
* Facial
* Hair Cutting
* Hair Colouring
* Hair Care
* Protein Treatment Head
* Weight Loss program
* bridal
* Makeup & Hair style
* Henna Designs
* Eye Lash Extensions
* Skin Tag Removal
* Microdermabrasion


Certificate Courses
* Hair Styles
* Makeup
* Bridal
* Esthetician Courses
  Threading
  Waxing
  Facial
* Hair Care
  Hair Colouring
  Protein Treatment Head
* Eye Lash Extensions
* Skin Treatment
  Microdermobrasion
  Chin Lifting
* Saree Wrapping
* Saree Blouse Making

ARAJEN BEAUTY & SKIN CARE

2607 Englinton ave east, Unit 4,6,7,
Scarborough, On M1K2S2

## Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்



* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், ‘இம்பிளான்ற்’ சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.


**MONDAY - FRIDAY**

**(416) 266-5161**

(Near Kennedy Subway - Rainbow Village Building)

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

2466 Eglinton Avenue East, Unit #7
Scarborough, Ontario M1K 5JB



Build Your Dream Home
SABESAN'S CHOICE
உங்கள் அனைத்து வீட்டு வேலைகளிற்கும் அழையுங்கள்.
400 Kilometre per hour Wind resistance.
Termite Proof
Compare traditional Building Energy Savings.
Mould Proof
Sound Resistence
Roof Top Greenhome
Sabesan's Choice
விருது பெற்ற தொழிற்துறை நிபுணர்
416.605.1990
kgsabesan@hotmail.com

# உதைபந்தாட்ட உலகக் கிண்ணம் 36 ஆண்டுகளின் பின் கனடா தகுதி



உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் பங்கேற்க 36 ஆண்டுகளின் பின்னர் கனடா அணி தகுதி பெற்றுள்ளது. சர்வதேச உதைபந்தாட்ட கட்டமைப்பு (FIFA) சார்பில் உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடர் கட்டாரில் இவ்வருடம் நவம்பர் 21 முதல் டிசம்பர் 18வரை நடக்கவுள்ளது. மொத்தம் 32 அணிகள் எட்டுப் பிரிவுகளாக வகுக்கப்பட்டு முதலில் லீக் முறையில் போட்டிகள் இடம்றெும். F அணியில் உலகதரத்தில் இரண்டாவது இடத்திலிருக்கும் பெல்ஜியம் மற்றும் குரோஷியா, மொறோக்கா ஆகிய அணிகள் குழுவில் கனடா இடம்பெறுகிறது.

இதற்கான தகுதிச் சுற்றுப்போட்டி ரொறன்ரோவில் நடைபெற்றபோது கனடாவும் ஜமெக்கா அணிகளும் மோதின. கனடா அணிக்கு லாரின், புச்சானன், ஹாய்லெட் ஆகிய வீரர்கள் தலா ஒவ்வொரு கோல் அடித்தனர். ஜமெக்கா அணியில் மரியபா சேம் சைட் கோல் அடித்தார். முடிவில் கனடா அணி 4:0 கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

கனடிய அணி 13 போட்டிகளில் பங்குபற்றி எட்டில் வெற்றியையும் நான்கில் சமநிலையும் அடைந்து ஒன்றில் தோல்வி கண்டு 28 புள்ளிகளைப் பெற்றது. 1986ம் ஆண்டுக்குப் பின்னர், 36 ஆண்டுகளுக்குப் பிறகு உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் பங்கேற்க கனடிய அணி தகுதி பெற்றுள்ளது வரலாற்றுச் சிறப்பாக பார்க்கப்படுகிறது.

கடந்த இரண்டு வருடங்களில் கனடிய அணி சாதித்த வெற்றிகளால் FIFA தராதர அடிப்படையில் முதல்தடவையாக கனடிய அணி 33வது இடத்துக்கு உயர்த்தப்பட்டுள்ளதும் ஒரு சாதனையாகும். 2022ம் ஆண்டின் CONCACAF சிறந்த விளையாட்டு வீரரென விருது பெற்ற அல்போன்சோ டேவிஸ் மற்றும் ஜொனாதன் டேவிட், ராஜோன் புச்சானன் ஆகிய உலகத்தரமான இளம் வீரர்கள் கனடிய அணியில் இம்முறை இடம்பெறுவதால் மற்றைய அணிகளுக்கு ஒரு சவாலாக அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

தகவல் - எஸ். கணேஷ்

HERITAGE
Education Funds
RESP
SAVINGS PLAN
கல்விச் சேமிப்புத் திட்டம்

Your are eligible to apply for and Education Savings Grant of up to $7,200 per child

Your savings are more safe and secure

Your can start with a small amount

it's a more flexible plan

EDUCATION IS
A GREAT GIFT FOR
YOUR FUTURE GENERATIONS

உங்கள் பிள்ளைகளின்
கல்விக்கான சேமிப்பு உங்கள்
எதிர்கால தலைமுறைக்கான முதலீடு

WWW.KERUDAVIL.COM

INCOME TAX
PREPARATION

Personal Income Tax
Small Business Income Tax
Computerized Returns

Graphic Land - 647. 219. 7576



S.Ganthiy
B.A. Srilanka
Enrollment Officer

416. 841. 1866
416. 955. 9303
E.mail: ganthiy@rogers.com


Financial Services
42 YEARS IN BUSINESS
KASI
THIRU
M. KASIPPILLAI & SONS INC.
3228 Eglinton Ave. E., Suite #3, Scarborough, Ont. M1J 2H6
Tel.: (416) 267-8221 Fax: (416) 267-0620


ABBIRAMI
CATERING AND TAKE OUT SERVICE
அபிராமியின்
வாழையிலை
விருந்து
Tel: (416) 266-5372
2619 Eglinton Ave. East,
Scarborough, Ont M1K 2S2
(Between Brimly & Midland)


Veerar Takeout & Catering
416-299-4541
647-293-6634
5790 Sheppard Ave East, #3, Scarborough, ON M1B 5J6


Babu Florist Ltd.
6055 Steeles Ave, Unit C114, Scarborough, Ontario. M1X 0A7
Temple, Wedding, Funeral & Others
Indian Malai & Jasmine Flowers Available
Call : M.Babu
416-754-8282
www.babuflorist.com
Email : info@babuflorist.com


8 Shadlock St Unit #6,
Markham, ON L3S 3K9
Tel : 416-321-7552
INDRAN SWEET
& Ice Cream


BAYVIEW HOMES
DESIGN LTD.
Dream Becomes Reality
Building Permits
Minor Veriance
Lot Severance
Legal Basement
Project Management
Kathir
416 856 6900
Subramaniam
Kathirgamanathan P.Eng.
BCIN 45205
email: kathirhomes@gmail.coml


KANAGAAMBIKAI
GOLD HOUSE
We Sell
*Singapore Jewellery
*Finest Quality 22K Gold
*Diamonds/ Birth Stones/
Jewellery/ Watches
We Provide
*Jewellery Repairs
Pawning
Gold Items
3160 EGLINTON AVE,E.,UNIT #3,
SCARBOROUGH,ON M1J 2H4
Tel:416-269-7197


SRI MAHA GANAPATHY TEMPLE
TORONTO
468 Gerrard St. East (Rear)
Toronto, ON. M5A 3H1
FB:Canada Sri Muthu Maha Ganapathy Temple
Tel: 647 699 0565

## மிளிரும்... ( 13ம் பக்கத் தொடர்ச்சி )

வீட்டிலிருந்தவாறே கற்றுத் தேர்ந்தார். இவரது பிறந்த தினம் 1926 ஏப்ரில் 21ம் திகதி. எனினும் பொதுமக்களும் கொண்டாட்டங்களில் சிரமமின்றி கலந்து கொள்ளும் விதத்தில் கால நிலையை கருத்தில் கொண்டு யூன் மாதத்தின் இரண்டாவது சனிக்கிழமையிலும் கொண்டாடப்படுகின்றது.

ஆறு வயதாக இருக்கும் பொழுது இல்லமொன்றின் உரிமையாளர் ஆனார். ‘சிறு குடில்’ என அழைக்கப்பட்ட அதனை வேல்ஸ் மக்கள் இவருக்கு அன்பளிப்புச் செய்திருந்தனர். கடவுட் சீட்டு இன்றியே உலகெங்கும் பயணிக்கும் அதிகாரமும் சாரதி அனுமதி பத்திரம் இன்றியே ஐக்கிய ராஜ்ஜியம் முழுவதும் வாகனம் செலுத்தும் அதிகாரமும் இவரிடம் உள்ளது. இவர் மீது வழக்கு பதிவு செய்ய முடியாது. கைது செய்ய முடியாது.

இங்கிலாந்தின் தேம்ஸ் நதியில் உள்ள அன்னப் பறவைகள் இவருக்குச் சொந்தமானவை என்பதும், இங்கிலாந்தின் கடற்பரப்பில் மூன்று மைல்களுக்குட்பட்ட திமிங்கிலங்கள், டொல்பின்கள் மற்றும் கோழி மீன் அல்லது துடுப்பு மீன் என அழைக்கப்படும் (Sturgeon) சுறா வகை மீன்கள் கூட இவராலேயே ஆளப்படுகின்றன என்பதும் அரிய ஜீவராசிகளுக்கும் இவர் வழங்கும் பாதுகாப்பை உரிய மனித ஜன்மங்களுக்கே பாதுகாப்பு வழங்காத நாடுகள் கண்டு கொள்ள வேண்டும்.

45 நாடுகளின் நாணயத்தில் இவரது முகம் உள்ளது உட்பட ஏராளமான சாதனைகளுக்கு உரியவராக இவர் பதிவு செய்யப்பட்டுள்ளார். 1952ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2ம் திகதி அரசியானார். எனினும் 1953ம் ஆண்டு யூன் மாதம் 2ம் திகதியே முடிசூடிக் கொண்டார். இடையே உள்ள 16 மாத நீண்ட காலத்தை அஞ்சலிக்க ஒதுக்குவது வழமை.

இதுவரை 70 வருடங்கள் மகாராணியாக வீற்றிருக்கும் இவர் 1837 முதல் 1901 வரை 63 வருடங்கள் மகாராணியாகத் திகழ்ந்த இவரது பூட்டியான விக்டோரியா மகாராணியின் சாதனையை 2015ல் முறியடித்தார். 2024 வரை ஆட்சி புரிவாரெனின் 1643 முதல் 1715 வரை 72 வருடங்கள் மன்னராக இருந்த பிரான்ஸ் நாட்டின் 14 வது லூயிஸின் சாதனையையும் முடிவுக்குக் கொண்டு வருவார்.

இவர் பிறந்தது ஓர் அரண்மனையில் அல்ல. 95 வருடங்களுக்கு முன்பு லண்டனின் மேபியர் 17 புருடன் வீதியில் இவர் பிறந்த இல்லம் 1937ல் இடிக்கப்பட்டு ஒரு சீன உணவகமும் அலுவலகங்கள் சிலவுமே இப்பொழுது அங்குள.

பொதுச் சேவையில் இவரது அர்ப்பணிப்பு, தீர்க்கமாக முடிவெடுக்கும் ஆற்றல், தனது அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்யாத நேர்மை, சுவாரஸ்யத்துடன் உரையாடும் சுபாவம், வார்த்தையில் கனிவு, நெஞ்சிலே துணிவு, அறிவிலே தெளிவு, மனதிலே மானுட நேயம் போன்றவற்றால் பிரித்தானிய மக்களால் பெரிதும் விரும்பப்படுகின்றார். உலக மக்களால் பெரிதும் மதிக்கப்படுகின்றார்.

**God save our gracious Queen, Long live our noble Queen!**

## றையர்சன் பல்கலைக்கழகம் மெற்றோபொலிட்டன் என மாற்றம்

ரொறன்ரோவில் இயங்கி வந்த றையர்சன் பல்கலைக்கழகம் கடந்த மாதம் மெற்றோபொலிட்டன் பல்கலைக்கழகம் எனப் பெயர் மாற்றம் பெற்றது. கனடாவின் முதலாவது பிரதமர் றையர்சனின் பெயரில் இதுவரை இயங்கிய இப்பல்கலைக்கழகம், வதிவிடப் பாடசாலைகள் விடயத்தில் இடம்பெற்ற நடவடிக்கைகளில் இவர் சம்பந்தப்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்ட நிலையில் இப்பெயர் மாற்றம் இடம்பெற்றது.

## கனடிய சனத்தொகையில் மூத்தோர் அதிகரிப்பு

2021ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கனடிய சனத் தொகை கணக்கெடுப்பின்படி, 85 வயதுக்கு மேற்பட்ட மூத்தோர் தொகை அதிகரித்துள்ளது. 2016-2021க்கும் இடையில் இத்தொகை 12 வீதத்தால் உயர்ந்துள்ளது. இவ்வாறு அதிகரிப்பு தொடருமானால் 2046ம் ஆண்டில் 85 வயதுக்கு அதிகமானோர் தொகை இப்போது உள்ளதைவிட இரண்டு மடங்கால் அதிகரிக்குமென எதிர்வு கூறப்பட்டுள்ளது.

## முடியாட்சிக்கு ஆதரவு குறைகிறது

இங்கிலாந்தின் முடியாட்சியின் கீழ் கனடா தொடர்ந்து இருப்பதற்கு பெருமளவு கனடியர்கள் விருப்பமின்மை தெரிவித்துள்ளனர். அண்மைய கருத்துக் கணிப்பின்படி ஐம்பது வீதத்துக்கு அதிகமானவர்கள் தங்கள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். எலிசபெத் மகாராணியின் பின்னர் இளவரசர் சார்ள்ஸ் அரியாசனம் ஏறுவதற்கு 25 வீதத்துக்கும் குறைவான கனடியர்களே விருப்பு தெரிவித்துள்ளனர். மகாராணியின் 70வது ஆண்டு மகுட விழாவையொட்டி சார்ள்ஸ் தம்பதியினர் இந்த மாதம் கனடா வரவுள்ளனர்.



# வாகன விபத்தில் காயமடைந்து விட்டீர்களா?

## அனுபவசாலிகளின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்.

**MATRIX LEGAL SERVICES**
PROFESSIONAL CORPORATION



**Even if the accident is your fault:**

Employed • Unemployed
Passenger • Pedestrian
Public transit
cyclist



WE ARE HERE TO
HELP YOU

இலவச ஆலோசனைகளுக்கு:

**தீபன்**

**24 Hours Direct Line**

**(416) 831-4444**
**(416) 505-9804**

**2190 Warden Ave ., Suite 202, Toronto, ON M1T 1V6**


நந்தா உணவகம்
NANTHA RESTAURANT
Best Caters in Town
NANTHA TAKEOUT & CATERING
TAKE YOUR FAVOURITE MEAL
AT OUR RESTAURANT
Bridlewood Mall
UNITS 105 & 106 - 2900 WARDEN AVE, SCARBOROUGH, ON M1W 2S8
Middlefield & Steeles
UNIT 2 - 2002 MIDDLEFIELD RD MARKHAM, ON L3S 1Y5
Kipling & Steeles
UNITS 17 & 18 - 5010 STEELES AVE W, ETOBICOKE, ON M9V 5C6
OPENING SOON
2200 BROCK ROAD, PICKERING
2900 MAJESTIC CITY MALL 16-9 FOOD COURT
416 - NANTHA - 1
416-626-8421
nanthacatersinc@gmail.com

# NKS Draperies & Blinds

210 Silver Star Road, Unit. 825
(Midland & Finch) Scarborough, ON

**416 321 6420**








- Vertical blinds
- Venetian blinds
- Draperies
- Curtains
- Shutters

உங்கள்
இல்லங்களை
மாளிகையாக்கிட

அழையுங்கள்
கேதா

தமது சிறப்பான சேவையினால்
தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்


BRACE FOR A GREAT SMILE

# DR. ILLANGO & ASSOCIATES

ORTHODONTICS, ORAL SURGERY, IMPLANT

Dental Office

**SCARBOROUGH**
**Kennedy / Finch Ave.**
3852 Finch Ave. East
Suite 204 & 303
Scarborough, ON
**Tel: 416-292-7004**

**BRAMPTON / MISSISSAUGA**
**Steeles / Hurontario**
7920 Hurontario Street
Unit # 37
Brampton, ON
**Tel: 905-457-1700**

**MARKHAM**
**Markham / 16th Ave.**
(New Location)
9500 Markham Road
Unit # 107
Markham, ON
**905-47 BRACE (27223)**



டாக்டர் எம்.கே. முருகானந்தன்

# அல்ஸீமர் நோய்

உங்கள் வீட்டில் ஒரு வயதானவர் இருக்கிறார் என வைத்துக் கொள்வோம். அண்மைக் காலங்களாக அவரது வாழ்க்கை முறையில் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன.

மறதி, நினைவுத் தடுமாற்றம், வழமையாக முகம் கழுவுதல் போன்ற பணிகளையும் செய்வதில் சிரமம். முன்னரைப் போல மற்றவற்றில் ஈடுபாடின்றி ஒதுங்கிப் போவது போன்றவற்றை அவதானிக்க முடிகிறதா?

வயசானால் இப்படித்தான் என அலட்சிப்படுத்தாதீர்கள். ஏனெனில் அது ஒரு நோயாக இருக்கலாம். உதாரணம் வேண்டுமென்றால் Black என்ற ஹிந்தித் திரைப்படத்தில் அமிதாப் பச்சான் நடித்த பாத்திரத்தை நினைவுறுத்துங்கள்.

அல்ஸீமர் நோய் (Alzheimer disease) என்பதை வயதான காலத்தில் ஏற்படும் நினைவிழப்பு மற்றும் சிந்தனைத் திறன் இழத்தல் எனவும் சொல்லலாம். பொதுவாக 65க்கு மேற்பட்டவர்களுக்கே வரும் நோயாயினும் இது மூளையில் ஏற்படும் நோயே அன்றி, வழமையான வயது முதிர்வதின் தாக்கம் அல்ல.

இது படிப்படியாக ஆரம்பித்து மூளையை நலிவடையச் செய்து மீளமுடியாத நிலைக்குச் செல்கின்றது. ‘மூளை அசதி நோய்’ எனவும் சொல்கிறார்கள். இது வரவர தீவிரமடைந்து செல்கிற நோய். மாற்ற முடியாதது. சிகிச்சைகளினால் அது தீவிரமடைவதைத் தாமதப்படுத்த முடியுமே அன்றி, முற்று முழுதாக நிறுத்த முடியாது. எனவே அல்ஸீமர் நோயை ஆரம்பத்தில் கண்டறிய முயலுங்கள்.

அல்ஸீமர் நோயல்லாத வேறு நினைவு மங்கும் நோய்களும் உள்ளன. ‘அறளை பெயர்தல்’ என்ற சொல் அவற்றிக்குப் பொருந்தலாம். முதுமையில் ஏற்படும் மறதி, அறிவாற்றல் இழப்பு, மறதி போன்றவற்றை ஆங்கிலத்தில் (Dementia) என்பார்கள். ‘மூளைத் தேய்வு’ என்ற சொல் இதற்குப் பொருத்தமாக இருக்கும். இவை வயதாவதால் ஏற்படுபவை. இந்த நோயைக் கண்டுபிடிப்பதற்கு முக்கியமாக அறிகுறிகள் தாம் உதவுகின்றன. ஆனால் ஆரம்ப நிலையிலேயே கண்டு பிடிப்பது மிகவும் சிரமமானது.

அண்மையில் நடந்த சம்பவங்களையும், அறிந்துகொண்ட, கற்றுக்கொண்ட விடயங்களையும் மறந்துவிடுவதுதான் அல்ஸீமர் நோயின் மிக முக்கியமான ஆரம்ப அறிகுறி எனலாம். மிக நெருக்கமானவர்களின் திருமணநாள், பிறந்தநாள் போன்ற முக்கிய தினங்களை மறந்து விடுவதும், மிக முக்கிய சம்பவங்களை நினைவில் காப்பாற்ற முடியாததும் இந்நோயின் ஏனைய அறிகுறிகளாகும்.

மறந்து விடாதிருக்க கலண்டரில் அல்லது டயறியில் குறித்து வைப்பதும், குறித்து வைத்ததையே மறந்துவிடுவதும், மறதியைத் தாண்ட காலத்தோடு சேர்ந்து ஓடும் சில வயதானவர்கள் கணினியை அல்லது வேறு இலத்திரனியல் கருவிகளை நினைவுறுத்துவதற்கு பயன்படுத்துவதுண்டு. பெயர்களை மறப்பதும், செய்ய வேண்டிய முக்கிய வேலைகளையும், நிகழ்வுகளையும் மறப்பதும் அல்ஸீமர் நோயின் முக்கிய அறிகுறி எனலாம்.

ஒரு பணியைத் திட்டமிடுவதிலும், அதை நடைமுறைப்படுத்துவதிலும் இந்நோயின் ஆரம்ப கட்டத்தில் சிலருக்கு சிரமங்கள் ஏற்படலாம். சில்லறைக் கணக்குகள் பார்ப்பதிலும், வழமையான மாதாந்த கொடுப்பனவுகளை செலுத்துவதிலும் பிரச்சனைகள் தோன்றலாம். வழமையான பல செயற்பாடுகளை செய்வதற்கு இப்பொழுது முன்பை விட கூடியளவு நேரம் தேவைப்படலாம். நாளாந்தக் கடமைகளை செய்து முடிப்பது பல அல்ஸீமர் நோயாளிகளுக்கு கடினமாயிருக்கும். உதாரணத்திற்கு வழமையாகச் சென்று வரும் வங்கி, கோயில், நண்பர் வீடு போன்ற இடத்திற்கான வழியை மறந்து விடுவார்.

பல அல்ஸீமர் நோயாளிகளுக்கு அன்றைய திகதி என்ன, காலையா, மாலையா அல்லது மாரி-கோடை, காலநிலை போன்றவற்றை நினைவுக்கு கொண்டுவருவதில் குழப்பம் ஏற்படலாம். சில தருணங்களில் தாங்கள் எங்கே இருக்கிறோம் அல்லது எவ்வாறு அவ்விடத்திற்கு வந்தோம் என்றவற்றை மறந்து தடுமாறுவர்.

ஒரு சிலருக்கு பார்வைக் கோளாறு மட்டுமே அல்ஸீமர் நோயின் முதல் அறிகுறியாக இருக்கலாம். வாசிப்பதிலும் அதனைப் புரிந்து கொள்வதிலும் சிலருக்கு சிரமம் தோன்றும். சிலருக்கு கண்ணில் படும் உருவங்களுக்கு இடையேயான தூரம், நிறவேறுபாடு ஆகியவற்றை வேறுபடுத்தி நிர்ணயிப்பது கஸ்டமாயிருக்கும். உதாரணத்திற்கு முகம் பார்க்கும் கண்ணாடியைத் தாண்டிச் செல்லும் போது அதில் உள்ள விம்பத்தைப் பிரித்தறிய முடியாது வேறு யாரோ அறையில் இருப்பதாக உணரக் கூடும்.

மற்றவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் அதனை புரிந்து கொள்வதிலும் அதில் இணைந்து கொள்வதும் இவர்கள் பலருக்கும் முடியாதிருக்கும். தான் பேசிக்கொண்டிருக்கையில் அதனை எவ்வாறு தொடர்வது எனப் புரியாமல் பேச்சை நிறுத்துவார். அல்லது சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லவும் கூடும். சரியான சொற்கள் வேண்டிய நேரத்தில் வராமல் திணறுவர். உதாரணத்திற்கு டோர்ச் லைட் என்பதை விளக்கு என்றோ, புத்தகம் என்பதைப் பேப்பர் என்பதாகவோ சொல்லக்கூடும்.

ஒரு பொருளை அதற்கான இடத்தில் வைக்காது பொருத்தமற்ற இடத்தில் வைப்பது அல்ஸீமர் நோயின் மற்றொரு ஆரம்ப அறிகுறியாகும். பேர்சில் வைக்க வேண்டிய பணத்தை மூக்கு கண்ணாடி உறையில் வைப்பார். பிறகு அதனைத் தேடிக் கண்டுபிடிக்க முடியாது திணறுவார். யாராவது அதனைத் திருடிவிட்டதாக குற்றம் சாட்டக்கூடும். காலம் செல்லச் செல்ல அல்ஸீமர் நோயாளிகள் தவறான முடிவு எடுக்கவும் கூடும். உதாரணமாக, பெருந்தொகை பணத்தை தவறான நபருக்கு கொடுக்க திடீரென முடிவு எடுக்கக்கூடும். குளிப்பது, முகம் கழுவுவது, சுத்தமான ஆடைகள் போன்றவற்றில் கவனம் செலுத்தாமல் இருப்பர். தனது சுத்தத்திலும், வீடு படுக்கை போன்றவற்றின் சுத்தத்திலும் அக்கறையற்று இருப்பர்.

ரிவி பார்ப்பது, பத்திரிகை - புத்தகம் படிப்பது, விழாக்களுக்கு செல்வது, நண்பர்களுடன் பொழுது போக்குவது போன்ற தனது வழமையான நடவடிக்கைகளிலிருந்து ஒதுங்கக் கூடும். தனக்கு விருப்பமான செயற்பாடுகளைக்கூட செய்து முடிக்க முடியாது மறப்பதும் இவர்களுக்கு இயல்பு. சந்தேகம், மனச்சோர்வு, பீதி, மனப்பதற்றம் போன்றவை மேலோங்கக்கூடும். மிக அற்பமான விடயங்களுக்கும் நிலை ததும்புவராக மாறுவர். இதனால் உறவினர்கள், நண்பர்கள் இடையே உறவுகள் விரிசலடையலாம்.

இத்தகைய அறிகுறிகளில் ஒரு சிலவாவது உங்கள் உறவினருக்கு இருந்தால் அது அல்ஸீமர் நோயின் ஆரம்பமாக இருக்கலாம். எதற்கும் நீங்களாக முடிவெடுக்காது நல்ல மருத்துவரை அணுகுங்கள். இந்த நோயை முதலில் இனங்கண்டவர் ஜேர்மன் மருத்துவர். இவரின் பெயர் Dr. Alois Alzheimer.


OIL CHANGE SPECIAL $19.95
+ Tax & Disposal Fees
Semi-Synthetic Oil Change includes:
Up to 5 L Standard Motor Oil
New Filter
Free Vehicle Inspection
Complete Front & Rear Brake Replacement or $25 off on each
$50 OFF
FREE!
BRAKE OR SHOCK INSPECTION
LIMITED TIME OFFER
SEE STORE FOR DETAILS
2nd Location
GRAND OPENING
MY MECHANIC
MY MECHANIC
AUTO & TIRE
4530 Steeles Avenue East
Markham, ON L3R 0L2
905-946-1000
1095 Ellesmere Road,
Scarborough ON M1P 2WP
416-757.1000
info@mymechanicauto.ca
mymechanicauto.ca


உங்களுக்குத் தெரியும்,
நம்பிக்கையுடனான தரமான சேவைகள்..
தகுதியான வெற்றிகளுக்கான
தரமான தெரிவு
On high, with your thoughts
PRO MAR Ltd.
AWARDS & PROMOTIONS
நகரின் முன்னணித் தமிழர் நிறுவனம்
இப்பொழுது
வீடு விற்பனைத்
துறையிலும்
www.promarawards.com
416-291 2344
585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5

ISSN 1206-0585

